




PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 229 01.04.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 229 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(1-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-18
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தசி காலை 7.37 வரை பிறகு பௌர்ணமி.
நட்சத்திரம்:
உத்திரம் மாலை 4.37 வரை பிறகு அஸ்தம்
யோகம்
அமிர்த/மரணயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி
எமகண்டம்
காலை 7.30-9.00 மணி.
சூலம் - வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4-5 மணி

மேஷம் .................. வாழ்வு
ரிஷபம் .................. நட்பு
மிதுனம் .................. புகழ்
கடகம் .................. சிறப்பு
சிம்மம் .................. கௌரவம்
கன்னி .................. அந்தஸ்து
துலாம் .................. பாசம்
விருச்சிகம் .................. உதவி
தனுசு .................. பாராட்டு
மகரம் .................. கண்ணியம்
கும்பம் .................. நிறைவு
மீனம் .................. வரவு

# இன்று தொடங்குகியது மக்கள்தொகை கணக்கெடுப்பு




**புதுடெல்லி, ஏப்.1:** இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு கடைசியாக 2011-ம் ஆண்டு நடத்தப்பட்டது. சுதந்திரத்துக்கு பிறகு இதுவரை 7 முறை மக்கள் தொகை கணக்கெடுப்புகள் நடந்துள்ளன. 8-வது கணக்கெடுப்பு கடந்த 2021-ம் ஆண்டே நடந்திருக்க வேண்டும், ஆனால் கொரோனா காரணமாக தள்ளி வைக்கப்பட்டது.

இந்த கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு (2027) 2 கட்டங்களாக நடக்கிறது. இதில் முதல்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டே தொடங்குகிறது. அதன்படி வருகிற நாளை (ஏப்ரல் 1-ந்தேதி) முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை வீடுகளை பட்டியலிடுதல், வீடுகளை கணக்கெடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயர்களை சேர்த்துக்கொள்ள முடியும். இதற்கான முறையான அறிவிப்புகளை மத்திய அரசு ஏற்கனவே வெளியிட்டிருந்தது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டிருந்த அறிவிப்பில், 2027-ம் ஆண்டு இந்திய மக்கள் தொகைகணக்கெடுப்பின் வீட்டுப் பட்டியல் நடவடிக்கைகள் இன்று ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், அந்தந்த மாநிலமும் யூனியன் பிரதேசமும் குறிப்பிடும் 30 நாட்களுக்குள் நடைபெறும் என்று மத்திய அரசு இதன்மூலம் அறிவிக்கிறது என குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டதை தொடர்ந்து மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நாளை (01.04.2026) தொடங்குகிறது.

இதுகுறித்து நாட்டின் பதிவாளர் ஜெனரலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையருமான மிருதுஞ்சய் குமார் நாராயண் செய்தியாளர்களிடம் கூறுகையில், "நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நாளை முதல் துவங்குகிறது. இந்த முறை பொதுமக்கள் தங்களை பற்றிய விபரங்களை, இணையதளம் வாயிலாக அவர்களாகவே பதிவு செய்யும், 'சுய விபரம்' என்ற வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக தமிழ், அசாமி, பெங்காலி, ஆங்கிலம், குஜராத்தி, இந்தி, கன்னடம், கொங்கனி, மலையாளம், மணிப்பூரி, மராத்தி, ஒடியா, பஞ்சாபி, தெலுங்கு, உருது உட்பட 16 மொழிகளில் பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது

> பொதுமக்கள் அளிக்கும் தகவல்கள் ரகசியம் காக்கப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம், பிரிவு 15ன் படி, நீதிமன்ற ஆதாரமாகவோ அல்லது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வாயிலாகவோ கேட்டு பெற முடியாது.

இதில் சுய விபரங்களை பதிவு செய்வோருக்கு, 16 இலக்க அடையாள எண் வழங்கப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பாளர், வீட்டிற்கு நேரில் வரும்போது, இந்த 16 இலக்க எண்ணை அவர்களிடம் வழங்கினால் போதும். ஆதார், வாக்காளர் அடையாள அட்டை என, வேறு எந்த ஆவணங்களையும் கணக்கெடுப்பாளரிடம் வழங்க வேண்டிய அவசியம் இல்லை. தகவல்கள் அனைத்தும் மொபைல் செயலி மூலம் கணக்கெடுப்பாளர்களால் பதிவு செய்யப்படும்.

இந்த பிரமாண்ட பணி இரு கட்டங்களாக நடக்கிறது. முதல் கட்டத்தில் வீடுகள் பட்டியல் மற்றும் வீட்டுவசதி பற்றிய கணக்கெடுப்பு எடுக்கப்படும். இரண்டாம் கட்டத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்பு இருக்கும். இதில் தான் ஜாதி, மதம் குறித்த தரவுகள் சேகரிக்கப்படும். முதல் கட்ட கணக்கெடுப்பு பணியில், 31லட்சம் கணக்கெடுப்பாளர்கள் ஈடுபட உள்ளனர். இதற்காக, 33 கேள்விகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்திற்கான கேள்விகள், பின் அறிவிக்கப்படும்.

பொதுமக்கள் அளிக்கும் தகவல்கள் ரகசியம் காக்கப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம், பிரிவு 15ன் படி, நீதிமன்ற ஆதாரமாகவோ அல்லது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வாயிலாகவோ கேட்டு பெற முடியாது. சைபர் பாதுகாப்பு முகமைகளின் உதவியுடன், பொதுமக்களின் தரவுகள் அனைத்தும், 'என்கிரிப்ட்' செய்யப்பட்டு சர்வரில் பாதுகாக்கப்படும்" என்று அவர் கூறினார்.

நாடு முழுதும் இந்த முறை டிஜிட்டல் முறையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதனால், மாநிலம் வாரியாக, சுய விபர பதிவு மற்றும் கணக்கெடுப்பாளர் வீடு தேடி வரும் தேதிகள் மாறுபடுகின்றன.

அந்த வகையில், தமிழகத்தில் பொதுமக்கள் தங்களது சுய விபரங்களை, ஜூலை 17 முதல் 31ம் தேதி வரை பிரத்யேக இணையதளத்தில் பதிவு செய்யலாம். வீடு தேடி வரும் நேரடி கணக்கெடுப்பு, ஆக., 1 முதல் 30ம் தேதி வரை நடக்கிறது. புதுச்சேரியில், சுய விபர பதிவு, மே 17 முதல் 31ம் தேதி வரையிலும், வீடு தேடி வரும் கணக்கெடுப்பு, ஜூன் 1 முதல் 30ம் தேதி வரையிலும் நடக்கிறது.

இந்த கணக்கெடுப்பின் அனைத்து பணிகளையும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31-ந்தேதிக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைகணக்கெடுப்பு டிஜிட்டல் முறையில் நடத்தப்படுகிறது. கணக்கெடுப்பாளர்கள் தங்களது ஸ்மார்ட்போனை பயன்படுத்தி, மொபைல் செயலி மூலம் நேரடியாக தரவுகளைச் சேகரித்துச் சமர்ப்பிப்பார்கள்.

சுய கணக்கெடுப்பு முறையானது, கணக்கெடுப்பாளர் வருவதற்கு முன்பு, ஒருவர் தனது சொந்த வசதிக்கேற்ப தகவல்களை நிரப்புவதற்கான நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது. முந்தைய கணக்கெடுப்புகளைப்போலவே, கணக்கெடுப்பாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வட்டாரங்களில் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பைத் தொடர்ந்தாலும், இந்த புதியமுறை பதிலளிப்பவர்களுக்கு வழங்கப்படும் ஒரு கூடுதல் வசதியாக உள்ளதாக கூறப்படுகிறது.

## பிரதமர் மோடி 4-ந்தேதி மயிலாப்பூர் தொகுதியில் ரோடு ஷோ



**சென்னை, ஏப்.1:** தமிழக சட்டசபை தேர்தலையொட்டி அரசியல் கட்சிகள் வேட்பாளர் பட்டியலை அறிவித்து வருகின்றன. அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க.வுக்கு 27 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 27 இடங்களுக்கான வேட்பாளர்கள் பட்டியலை பா.ஜ.க. தேசிய தலைமை இன்று அல்லது நாளை வெளியிட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, பிரதமர் நரேந்திரமோடி ஏப்ரல் 3-ந்தேதி தேர்தல் பிரசாரத்துக்காகசென்னை வர உள்ளார். சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு செல்லும் பிரதமர் மோடி தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொள்கிறார். இதில் புதுச்சேரி கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கிறார்கள். அதனை முடித்துவிட்டு அன்றிரவு சென்னைக்கு பிரதமர் மோடி வருகிறார்.

சென்னையில் தங்கும் பிரதமர் மோடி, 4-ந்தேதி பா.ஜ.க.வின் முக்கிய தலைவர்களுடன் தேர்தல் பிரசாரம், வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

தொடர்ந்து பிரதமர் நரேந்திரமோடி மயிலாப்பூர் தொகுதியில் ரோடு ஷோ நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ஸ்டாலினின் கையிருப்பு ரூ.10 ஆயிரம் மட்டுமே; விஜய்க்கு ரூ.404 கோடிக்கு அசையும் சொத்து

### வேட்புமனுவுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தகவல்

**சென்னை, ஏப்.1:** கையிருப்பாக ரூ.10 ஆயிரம் மட்டுமே ரொக்கம் இருப்பதாகவும், ரூ.6.26 கோடிக்கு அசையும், அசையா சொத்துகள் இருப்பதாகவும் வேட்புமனுவில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தவெக தலைவர் விஜய், தனக்கு ரூ.404 கோடியில் அசையும் சொத்துகள் இருப்பதாக தெரிவித்துள்ளார். சென்னை கொளத்தூரில் போட்டியிடும் மு.க.ஸ்டாலின் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அத்துடன் அவர் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம்:

கடந்த ஆண்டு தனக்கு ரூ.30.59 லட்சமும், மனைவி துர்காவுக்கு ரூ.5.33 லட்சமும் வருமானம் கிடைத்ததாக வருமான வரி கணக்கில் தெரிவித்துள்ளார். தன்னிடம் தற்போது கையிருப்பாக ரூ.10 ஆயிரமும், மனைவி துர்காவிடம் ரூ.40 ஆயிரமும் ரொக்கம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தன்னிடம் நகைகள் எதுவும் இல்லை. மனைவி துர்காவிடம் 720 கிராம் நகைகள் உள்ளன. இருவர் பெயரிலும் கார் உட்பட எந்த வாகனங்களும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தனது பெயரில் ரூ.3.30 கோடி மதிப்பிலான அசையும் சொத்துகளும், மனைவி துர்கா பெயரில் ரூ.1.32 கோடி மதிப்பிலான அசையும் சொத்துகளும் என மொத்தம் ரூ.4.62 கோடிக்கு அசையும் சொத்துகள் உள்ளன.

விவசாய நிலம், குடியிருப்பு கட்டிடம் என முதல்வர் ஸ்டாலின் பெயரில், ரூ.2.96 கோடிக்கும், மனைவி துர்கா பெயரில் ரூ.2.11 கோடிக்கும் என ரூ.5.07 கோடி அசையா சொத்துகள் உள்ளன. மொத்தமாக, அசையும், அசையா சொத்துகள் என ரூ.9.69 கோடி சொத்துகள் உள்ளன. தனக்கும், தனது மனைவிக்கும் கடன்கள் இல்லை. வழக்குகள் ஏதும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விஜய் சொத்து மதிப்பு: பெரம்பூர் தொகுதியில் போட்டியிடும் தவெக தலைவர் விஜய் தனது வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்தார். அனர் தனது பிரமாண பத்திரத்தில்,கையில் ரூ.2 லட்சம் ரொக்கம் இருப்பதாகவும், மனைவியிடம் ரூ.1 லட்சம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வங்கி சேமிப்பு கணக்குகள், வைப்பீடுகள் என மொத்தம் ரூ.404.58 கோடிக்கு அசையும் சொத்துகள் உள்ளன. கட்டிடங்கள், குடியிருப்புகள், நிலங்கள் என அசையா சொத்துகளின் மதிப்பு ரூ.115.13 கோடியாகும். குற்ற வழக்குகள் ஏதும் தன் பெயரில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தனது மனைவி சங்கீதா பெயரில் ரூ.15.51 கோடியில் அசையும் சொத்துகள், ரூ.2.50 கோடி மதிப்பு அசையா சொத்துகள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். 2 பிஎம்டபிள்யு, லெக்சஸ், டோயட்டோ வெல்பயர், மாருதி ஸ்விப்ட், டிவிஎஸ் எக்ஸ்எல் உள்ளிட்ட வாகனங்கள் இருக்கின்றன.

தனது பெயரில் ரூ.1.20 கோடி மதிப்பிலான 883 கிராம் தங்கம் உள்ளது. 135 காரட் வைர நகைகள் மனைவி சங்கீதா பெயரில் இருக்கிறது. கொடைக்கானலில் 2 பங்களா உள்ளது. தனது பெயரில் கடன் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார்.

அதேநேரத்தில், தந்தை சந்திரசேகருக்கு ரூ.3.02 கோடி, மனைவி சங்கீதாவுக்கு ரூ.12.60 கோடி, தாய் ஷோபாவுக்கு ரூ8.71 லட்சம், புஸ்ஸி ஆனந்த்துக்கு ரூ.3 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார்.

# சுவிதா செயலியில் பெறப்பட்ட 724 விண்ணப்பங்கள் ஏற்பு




**சென்னை, ஏப்.1:** மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகசட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள், பேரணி, தெருமுனைக் கூட்ட பிரச்சாரம் நடத்துதல், வாகனங்கள் மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்துதல், தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்டவற்றுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் சுவிதா (Suvidha) செயலி மூலம் நிகழ்வு தொடங்குவதற்கு 48 மணிநேரத்துக்கு முன்பாக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும்.

இந்த செயலி மூலம் நேற்று காலை 11 மணி நிலவரப்படி, 1,157 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 724 விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 219 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

214 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. சென்னை மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள் நடத்த 112 இடங்கள், தெருமுனைக் கூட்டங்கள் நடத்த 179 இடங்கள் என மொத்தம் 291 இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த 291 இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் பணியாளர்களின் ஊதியம் இருமடங்கு உயர்வு!

**சென்னை, ஏப்.1:** தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் பணிகளில் ஈடுபடும் வாக்குச் சாவடி மற்றும் வாக்கு எண்ணிக்கை மையப் பணியாளர்களின் ஊதியம் இருமடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஒரே கட்டமாக வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் நிலையில், அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் கண்காணிப்புக் குழுக்கள், 24x7 நேரமும் தீவிரமாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

30.03.2026 அன்றைய நிலவரப்படி, இக்குழுக்களால் ரூ. 61.98 கோடி ரொக்கம், ரூ. 1.17 கோடி மதுபானங்கள், ரூ. 8.30 கோடி போதைப் பொருள்கள், ரூ. 197.35 கோடி தங்கம், வெள்ளி பொருள்கள் உள்பட மொத்தம் ரூ. 296 கோடி மதிப்பிலான ரொக்கம், பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



இதனிடையே, தேர்தல் பணிகளில் ஈடுபடும் வாக்குச் சாவடி பணியாளர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை பணியாளர்களின் ஊதியத்தை இருமடங்கு உயர்த்தி தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி, வாக்குச்சாவடி தலைமை அலுவலர் ஊதியம் ரூ. 1,700-ல் இருந்து ரூ. 3,000 ஆகவும், வாக்குப்பதிவு அலுவலர் ஊதியம் ரூ. 1,300-ல் இருந்து ரூ. 2,600 ஆகவும், வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர் ஊதியம் ரூ. 850-ல் இருந்து ரூ. 1,500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், வாக்கு எண்ணும் உதவியாளருக்கு ரூ. 650-ல் இருந்து ரூ. 1,400 ஆகவும், நுண் பார்வையாளருக்கு ரூ. 1,000-ல் இருந்து ரூ. 2,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.





## ஸ்ரீ நிலமங்கத் தாயார் பங்குனி உத்தர உற்சவம்



திருக்கடல் மல்லை ஸ்ரீ நிலமங்கத் தாயார் பங்குனி உத்தர உற்சவம் 08ம் திருநாள்.

## ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் பிரம்மோற்சவம்



மதுரை ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் பிரம்மோற்சவம் பத்தாம் திருநாள்- புஷ்ப விமானம்.

## மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு எக்ஸ - ரே கவர் வழங்கும் நிகழ்வு



**கோவில்பட்டி, ஏப்.01:**
கோவில்பட்டியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூபாய் 15,000 மதிப்புள்ள பெரிய சைஸ் எக்ஸ் ரே கவர் 500 ம், சிறிய சைஸ் எக்ஸ் - ரே கவர் 4500 ம் இந்திய கலாச்சார நட்புறவு கழக மாநில துணைத்தலைவரும், பைரவா மஹால் உரிமையாளருமான அபிராமி P முருகன் அவர்களால், தலைமை மருத்துவ கண்காணிப்பாளர் Dr. பாலகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கப்பட்டது. நிகழ்வில் கருத்துரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு தலைவர் க தமிழரசன், உதவி மருத்துவ கண்காணிப்பாளர் Dr. சுதா, தலைமை செவிலியர் லட்சுமி காந்தம், பகத்சிங் ரத்ததான கழக நிர்வாகிகள் மா காளிதாஸ், லட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் அரசு மகளிர் விடுதியில் 30 பேருக்கு உடல் நலக்குறைவு: மாணவிகள் சாப்பிட்ட உணவு சோதனைக்கு அனுப்பி வைப்பு



**நாமக்கல், ஏப்.01:**
மோகனூர் சாலையில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் மாணவிகள் விடுதி உள்ளது. இங்கு 103 மாணவிகள் தங்கி உள்ளனர். இவர்கள் நாமக்கல் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 6-ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரை படித்து வருகின்றனர். தற்போது பிளஸ்- 1 மற்றும் பிளஸ்- 2 வகுப்புகளுக்கு தேர்வு முடிந்து விட்டதால் அவர்கள் சொந்த ஊருக்கு சென்று விட்டனர். தற்போது விடுதியில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை படிக்கும் 56 மாணவிகள் மட்டும் தங்கி படித்து வருகின்றனர்.

இந்த விடுதியில் கொல்லிமலை பகுதியை சேர்ந்த மாணவிகள் அதிகம் பேர் உள்ளனர். இந்நிலையில் நேற்று மதியம் மாணவிகளுக்கு விடுதியில் சாதம், முட்டை கோஸ் பொரியல் மற்றும் பரங்கிக்காய் சாம்பார் வழங்கப்பட்டது. இதை சாப்பிட்ட மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது.

வாந்தி, மயக்கம் ஏற்பட்ட 30 மாணவிகள் நாமக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சாம்பார் காலையில் சமைத்ததில் மீதம் இருந்த சாம்பார் என கூறப்படுகிறது. இதை சாப்பிட்டதால் மாணவிகள் மயக்கம் அடைந்தார்களா? அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா? என்பதை உணவு பாதுகாப்பு அதிகாரி தங்க விக்னேஷ் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்து 9 உணவு மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆய்வுக்கு பின்னரே மாணவிகள் மயக்கம் அடைந்ததற்கு என்ன காரணம்? என்பது தெரிய வரும்.

# காட்பாடி சட்டமன்ற தொகுதியில் 13வது முறையாக போட்டியிடும் மாஜி அமைச்சர் துரைமுருகன்!

**வேலூர், ஏப்.01:**
காட்பாடி சட்டமன்ற தொகுதியில் 13 வது முறையாக போட்டியிடும் திமுக வேட்பாளர் துரைமுருகன் சித்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து அண்ணா சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்த பின்னர் தனது பிரச்சாரத்தை தொடங்கினார்.

விஜய்யை தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை. நான் மீண்டும் காட்பாடியில் போட்டியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. நான் என் தொகுதிக்கு என்னென்ன செய்தேன் என்பது மக்களுக்கு தெரியும் என பேட்டியளித்தார்.

வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் 30ம் தேதி ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்பாடிக்கு வந்தார்.

அவருக்கு திமுக தேமுதிக, விசிக, மதிமுக, கம்யூனிஸ்ட்டுகள் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் உற்சாக வரவேற்பளித்தனர். அங்கிருந்து தொண்டர்களுடன் ஊர்வலமாக வந்த துரைமுருகன் சித்தூர் பேருந்து நிலையத்திலிருந்து



பிரச்சாரத்தை தொடங்கினார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் மற்றும் துணை மேயர் சுனில்குமார், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மக்களிடையே திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேசுகையில், இந்த வாக்காளர்கள் தெய்வங்களுக்கு நன்றி. மீண்டும் எனக்கு காட்பாடி தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்துள்ளனர்.

மகிழ்ச்சியளிக்கிறது.ஒவ்வொரு முறையும் எனக்கு ஆதரவளித்து வாக்களிக்கிறீர்கள் .இம்முறை வாக்களியுங்கள் என பேசினார். பின்னர் துரைமுருகன் கூறுகையில், நான் மீண்டும் காட்பாடியில் போட்டியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

நான் என் தொகுதிக்கு என்னென்ன செய்தேன் என்பது மக்களுக்கு தெரியும். நான் வெற்றி பெற்ற பின்னர் தொகுதிக்கு செய்ய சில திட்டங்களை வைத்துள்ளேன். வெற்றி பெற்ற பின்னர் அவைகளை செய்வேன். விஜய் திமுக தேர்தல் அறிக்கை உடைந்த கண்ணாடி, கிழிந்த துணி என கூறியது குறித்து கேட்டதற்கு விஜய்யை நான் தலைவராகவே ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்.

## எங்க ஊருக்கு ஓட்டு கேட்டு யாரும் வர வேண்டாம் கிராம மக்கள் பேனர் வைத்ததால் பரபரப்பு

**திருப்பத்தூர், ஏப்.01:**
திருப்பத்தூர் மாவட்டம் ஜவ்வாதுமலை புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் ஒன்று கூடி தேர்தலின் போது ஓட்டு கேட்டு எங்க ஊருக்கு யாரும் வர வேண்டாம் என வினோத பேனர் ஒன்று வைத்தனர்.

அதில் வருகிற சட்டமன்றத் தேர்தலை புறக்கணிப்போம், தயவு செய்து ஓட்டு கேட்டு யாரும் எங்கள் ஊருக்கு வர வேண்டாம், போலியான மற்றும் அரசு அங்கீகரிக்கப்படாத போலி ஜாதி சான்றிதழை ரத்து செய்ய வேண்டும்.அதனை வழங்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை



எடுக்க வேண்டும்.

80 ஆண்டு காலமாக எங்கள் ஊரில் உள்ள 50 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்படாமல் உள்ளது. வீட்டு வரி ரசீது வழங்க வேண்டும். குடிநீர் வசதி வேண்டும். ரேஷன் கடை வேண்டும். ஜவ்வாது மலை பகுதிகளில் முறையான சாலை வசதி இல்லை. பலரிடம் புகார் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே தயவு செய்து எங்க ஊருக்கு ஓட்டு கேட்க யாரும் வர வேண்டாம். மேலும் அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் ஒன்று கூடி கோஷங்கள் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

## கலைஞர் படுத்திருந்த கல்லக்குடி ரெயில் தண்டவாளத்தில் மன்சூர் அலிகான்

**லால்குடி, ஏப்.01:**
வருகிற சட்டமன்ற தேர்தலில் மன்சூர் அலிகான் தனது இந்திய ஜனதா கட்சி சார்பில் லால்குடி தொகுதியில் போட்டியிடுகிறார்.

இதைத் தொடர்ந்து லால்குடி தொகுதி முழுவதும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் மன்சூர்அலிகான் கல்லக்குடி பகுதியில் பிரசாரம் செய்தார்.

அப்போது கல்லக்குடி ரெயில் தண்டவாளத்தில் மறைந்த முதலமைச்சர் கருணாநிதி படுத்திருந்த இடத்தில் நேற்று காலை மன்சூர் அலிகான் சிறிது நேரம் படுத்திருந்தார்.




இதுகுறித்து மன்சூர்அலிகான் கூறியதாவது:-

“கல்லக்குடி ரெயில் நிலையம் வரலாற்று சிறப்புமிக்கது. முத்தமிழறிஞர் கலைஞர் லால்குடி தொகுதிக்குட்பட்ட கல்லக்குடி ரெயில் தண்டவாளத்தில் படுத்திருந்தார். அப்பேர்பட்ட பெரிய தலைவர் படுத்திருந்த ரெயில் நிலைய தண்டவாளத்தில் படுத்து பார்க்க ஆசைப்பட்டேன். அதன்படி இன்று காலை கல்லக்குடி ரெயில் தண்டவாளத்தில் சிறிது நேரம் படுத்திருந்தேன்.

ரெயில் நிலையத்தில் மதியத்திற்கு மேல்தான் ரெயில் வரும் என்று கேள்விபட்டேன். அதனால் என் ஆசையை ரெயில் வராத காலை நேரத்தில் தண்டவாளத்தில் படுத்து தீர்த்துக் கொண்டேன்.

லால்குடி தொகுதி மக்கள் வஞ்சிக்கப்பட்டு உள்ளார்கள். வரலாற்று சிறப்புமிக்க லால்குடி தொகுதியில் போட்டியிடுவதில் பெருமை அடைகிறேன் என்றார்.

## சொத்து வரி பாக்கி - ஜெயலலிதா வீட்டுக்கு சீல் வைப்பு



**ஐதராபாத், ஏப்.01:**
மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சொந்தமாக ஐதராபாத்தில் பங்களா ஒன்று உள்ளது. ஐதராபாத் ஸ்ரீநகர் காலனியில் உள்ள இந்த வீட்டுக்கு பல ஆண்டுகளாக சொத்து வரி செலுத்தப்படாமல் இருந்துள்ளதாக தெரிகிறது.

இதை தொடர்ந்து ஐதராபாத் மாநகராட்சி சார்பில் இன்று ஜெயலலிதாவின் வீட்டுக்கு சீல் வைத்துள்ளனர். ரூ.1.60 கோடி அளவுக்கு சொத்து வரி நிலுவையில் இருந்து வந்த நிலையில் அது தொடர்பாக பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், வரி கட்டப்படாமல் இருந்துள்ளது. இதை தொடர்ந்து மாநகராட்சி நிர்வாகத்தினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## “தமிழகத்தில் அதிமுக அடிமை ஆட்சி அமையவிடக் கூடாது”



### அரூரில் உதயநிதி பிரச்சாரம்

**அரூர், ஏப்.01:**
“தமிழகத்தில் அதிமுக அடிமை ஆட்சியை அமைய விடக்கூடாது. பிரதமர் மோடி அமித் ஷா ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யாத பாஜகவை தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். ” என தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் நேற்று தேர்தல் பரப்புரையில் திமுக இளைஞரணி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஈடுபட்டு வருகிறார். முதலாவதாக அரூர் (தனி) தொகுதி திமுக வேட்பாளரான அ.சண்முகத்தை ஆதரித்து தமிழக துணை முதல்வரும்,திமுக இளைஞரணி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், “திமுக மீண்டும் ஆட்சி அமைத்த உடன் இல்லத்தரசி திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.8,000 மதிப்புள்ள ஒரு கூப்பன் வழங்கப்பட்டும். அதில் வீட்டுக்கு தேவையான எலக்ட்ரானிக் சாதனங்களை வாங்கிக் கொள்ளலாம்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழகம் இருந்து வருகிறது. ஒன்றிய அரசு நாம் கேட்கின்ற நிதியை கொடுக்கவில்லை, மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை பார்த்து பார்த்து தமிழக முதல்வர் ஸ்டாலின் செய்துள்ளார். இனியும் இது தொடர வேண்டும்.

மீண்டும் அதிமுக அடிமை ஆட்சியை தமிழகத்தில் அமைய விடக்கூடாது, பிரதமர் மோடி அமித் ஷா ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகின்றனர், தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யாத பாஜகவை தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும், அதிமுகவுக்கு போடப்படும் வாக்கு பாஜகவுக்கு போடும் வாக்கு. இது தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் நடக்கக்கூடிய தேர்தல், மோடியா தமிழ்நாடா என பார்க்கக்கூடிய தேர்தல். ஒவ்வொரு முறையும் டெல்லியை ஓட ஓட விரட்டிக் கொண்டு இருக்கிறோம், மோடி அமித் ஷாவைக் கூட ஓட ஓட விரட்டி இருக்கிறோம்.

இந்த தேர்தலிலும் மோடியையும் அமித் ஷாவையும் விரட்ட வேண்டும், ஜாடிக்கேற்ற மூடி என்ற பழமொழி உள்ளது. அதே போல தான் மோடிக்கு ஏத்த எடப்பாடி இருக்கிறார், முரட்டு பக்தர் போல இருக்கும் முரட்டு அடிமையை விரட்டி அடிக்க வேண்டும் . பத்து தோல்வி பழனிசாமியை மொத்த தோல்வி பழனிசாமியாக்கி விரட்ட வேண்டும்,” என்றார்.

இதனைத் தொடர்ந்து திமுக வேட்பாளர் சண்முகத்திற்கு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## பங்குனி உத்திரத்தையொட்டி மயிலம் முருகன் கோவிலில் தேரோட்டம்

**விழுப்புரம், ஏப்.01:**
விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் மயில் வடிவ மலையில் முருகப்பெருமான் கோவில் அமைந்துள்ளது. இங்கு வள்ளி-தெய்வானையுடன் திருமண கோலத்தில் முருக பெருமான் அருள் பாலித்து வருவது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். மிகவும் பிரசித்தி பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும்.

அதன்படி இந்த ஆண்டுக்கான விழா கடந்த 23-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி தினமும் முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வந்து இரவில் முருகப்பெருமான் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி மலை வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

விழாவில் 8-ம் திருவிழாவான நேற்று இரவு முருகனுக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று வெள்ளி குதிரை வாகனத்தில் முருகன் மலை



வலக்காட்சி நடைபெற்றது.

விழாவில் சிகர திருவிழாவான தேரோட்டம் இன்று அதிகாலை நடைபெற்றது. இதையொட்டி அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு மூலவருக்கு பால், தயிர், இளநீர் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களை கொண்டு சிறப்பு அபிஷேகமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

பின்னர் விநாயகர், வள்ளி-தெய்வானை, முருகனுக்கு தங்க கவசம் அணிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து உற்சவர் விநாயகர், வள்ளி-தெய்வானையுடன் முருகன் சிறப்பு அலங்காரத்தில் அங்கு அலங்கரிக்கப்பட்டு இருந்த தனித்தனி தேர்களில் எழுந்தருளினர்.

அதிகாலை 5.46 மணியளவில் அர்ச்சகர்கள் வேதங்கள் முழங்க மயிலம் 20-ம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் விநாயகர் தேரையும், அதைத் தொடர்ந்து முருகன் தேரையும் வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார்.

அப்போது அங்கு திரண்டு இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா..., கந்தனுக்கு அரோகரா... என்று கோஷங்கள் விண்ணை முட்டும் அளவிற்கு பக்தி கோஷங்களை எழுப்பி தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

3-ம் பிரகாரம் என்று அழைக்கப்படும் மலையை சுற்றி பக்தர்கள் கூட்டத்திற்கு மத்தியில் தேர் அசைந்தாடி வந்த காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைத்தது.

தேரோட்டத்தின் போது விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த நெல் மணிலா, மிளகாய், துவரை போன்ற தானியங்களை தேரில் வாரி இறைத்து மழை நன்றாக பெய்து விளைநிலங்கள் செழித்து விளைய வேண்டும் என பயபக்தியுடன் வேண்டிக் கொண்டனர்.

விநாயகர் தேர் 6.45 மணிக்கும், முருகன் தேர் 7.10 மணிக்குள் மலையை சுற்றி வந்து நிலையை அடைந்தன. முன்னதாக முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் விதமாக பக்தர்கள் பால்காவடி, புஷ்பக்காவடி மற்றும் வேல் அலகு குத்திக் கொண்டு வந்து நேர்த்திக் கடனை நிறைவேற்றினர்.

விழாவில் விழுப்புரம், கடலூர், சென்னை, புதுச்சேரி, திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை என்று பல்வேறு இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் பெரும்பாலானவர்கள் கிராமப்புறங்களில் இருந்து, மாட்டு வண்டியிலும், டிராக்டரிலும் வந்தனர்.

தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. விழா பாதுகாப்புக்காக திண்டிவனம் துணை போலீஸ் சூப்பிரண்டு பிரகாஷ் தலைமையில் 300-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர்.

விழாவில் 10-வது நாளான இன்று (1-ந்தேதி) தெப்ப உற்சவமும், நாளை (2-ந்தேதி) முத்து பல்லக்கில் சாமி மலைவல காட்சியும் நடைபெற இருக்கிறது.

விழா ஏற்பாடுகளை 20-ம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் செய்திருந்தார்.

## WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும்.7845904395/ 8668107106

## ADVERTISE WITH US

CONTACT US 9438610756

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

## PLOT SALE

ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L

9626777627

## உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு

உங்கள் ஜோதிடர் 9940374962

### D.சக்திவேல்

அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)

வீடு மனை வாங்க விற்க அணுகவும்

நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

## Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

## ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact 9790979539

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS – BOOK NOW!

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection...

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## CAR WASH SUPREME

SADHANA DEVI.K

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

www.arultharumdeivam.com

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact 8248951872

## கவிதை அரங்கம்!





கண்ணோடு
நீயிருப்பதால்
என்னோடு
நீயில்லையென்ற
எண்ணமே
எனக்கெழுந்ததில்லை

கற்பனையுலகும்
பிடித்துப்போனது
அதிலும்

நிலவைபோல்
நீயே உலா
வருவதால்

விட்டுவிட்டு துடிக்கும்
இதயமும்
விடாமல் துடிக்கின்றது
உன் தாமதத்தின்
காரணம் புரியாமல்

## வாழ்க்கை தத்துவம்...



நீ இழந்ததை நினைத்து
வருந்தினால் இருப்பதையும்
இழந்து விடுவாய் நீ
இருப்பதை நினைத்து
மகிழ்ந்தால் இழந்ததையும்
அடைந்து விடுவாய்

சேரகம் எனும் பறவைகள்
உங்கள் தலைக்கு மேல்
பறப்பதைத் தடுக்க
இயலரது ஆனால் உங்கள்
தலையில் கூடுகட்டி
வாழ்வதைத் தவிர்க்கலாம்

எந்த ஒரு தெளிவில்லாத
வினாவிற்கும் சிறந்த
விடை மௌனம் எந்த
ஒரு சூழ்நிலைக்கும்
சிறந்த எதிர்வினை புன்னகை

## விருது.

அந்த இலக்கிய
அமைப்பின் ஆறாம்
ஆண்டு விழா...
அந்த நகரத்தின்
மையப்பகுதியில் இருக்கும்
பெரிய நட்சந்திர விடுதியில்
நடந்து கொண்டிருக்கிறது!
தமிழகத்தின் பல
பகுதியிலிருந்து
கவிஞர்கள்..
எழுத்தாளர்கள்
ஒவ்வொருவராக வந்து
கொண்டிருந்தனர்.

கவிதை ஆர்வத்திலே
பலமைல் தூரங்களைக்
கடந்து.. பேருந்திலும்..
ரெயிலிலும்..
சொந்தக்காசை செலவு
செய்து அந்த இலக்கிய
விழாவில் கலந்து
கொண்டவர்கள் பலர்.
அவர்களில் ஒருவன்
கவிமுகிலன்.

எத்தனையோ தடைகள்
ஏளனங்கள்..
அவமதிப்புகள் கடந்து
பல்லாண்டுகளாக
கவிதைகள் இயற்றிக்
கொண்டிருக்கின்றான்
கவிமுகிலன். அவனைப்
போல் எத்தனைப்பேர்?

நுழைவாயில் அருகே
விழா ஏற்பாடடாளர் நின்று
கொண்டிருந்தார்.
அவரைச்சுற்றி ஒரு கூட்டம்.
அவர் தமிழ்நாடு அரசின்
விருதாளர். பல புத்தகங்க
ளை வெளியிட்டவர்!
பற்பல விழாக்களை
நடத்தியவர்.. பலருக்கும்
கம்பன் விருது.. பாரதி
விருது என்று அள்ளி
வழங்கியவர்!

நுழைவாயிலில் ஒரு
ஏட்டில் விழாவில்
கவிதைப் போட்டியில்
பங்கேற்பவர்கள் தமது
பெயரையும் தொலைபேசி
எண்ணையும் எழுதி
வைத்தனர்.

அரங்கின் அருகே விழா
ஏற்ப்பாட்டாளர்.. நின்று
ஒவ்வொருவரையும்
அழைத்து அவர்களிடம்
ஏதோ சொல்லிக்
கொண்டிருந்தார்.

கவிமுகிலனை
அழைத்தார்.. தம்பி
எந்த ஊரில் இருந்து
வருகின்றீர்கள்?
ஓ... திருச்சியா..
அப்புறம் தம்பி ஒரு
விசயம்.. என்று அருகே
அழைத்து இவ்வாறு
கூறினார்!

தம்பி போட்டிக்கு
பங்குத்தொகை மற்றும்
சிறப்பு ஷீல்டு சான்றிதழ்
விருதுக்காக ஆயிரம்
ரூபாய் தர வேண்டும்..
தொகை இல்லையே
ஐயா... இது கவிமுகிலன்.!
அப்படியா கவிதை
பாடுங்கள் சான்றிதழ்
மட்டும் வழங்கப்படும் என்று
சொன்னார்.

கவிமுகிலன்
ஏழைக்கவிஞன் . செலவு
செய்து கொண்டு வந்தவன்
ஆர்வமுடன் கவிதை எழுதி
வந்தவன் விருதுகளை
காசுதான் தீர்மாணிக்கும்
அவலநிலை கண்டு தலை
குனிந்தான்.

திறமையை மதிப்பார்
யாருமுண்டோ..
காசில்லாமல் கவி
தைத் திறனுக்கு விருது
தருவார் யாருமுண்டோ..
ஏக்கத்தோடு ஒரு ஓரமாக
சென்று அமர்ந்தான்!

கவியரங்கம் ஆரம்பம்
ஆனது பலரும்
வாசித்தனர்..
முணுமுணுத்தனர்.. துதி
பாடினர்..

கவிமுகிலன் பாடுகின்றான்
கடைசியாக...

நமது மொழி நமது நாடு
நமதுமக்கள்..
நலம்பெறவே பாடுவதே
நமது கவிதை!
நமது இனம் விழித்திடவே
கவிதைப் பாடி..
உறக்கமதை விரட்டுவதே
நமது வேலை.!

என்று உணர்ச்சியுடன்
கவிதை வழங்கினன்.
அரங்கம் அதிர்ந்தது..
கரஓசை எழுந்தது.. பலரும்
மகிழ்ந்தனர்.

விருது வழங்கும் நேரம்
பணம் ஆயிரம்
செலுத்தியவர்கள் கேடயம்..
பதக்கம்.. சான்றிதழ்..
பெற்றவர் பலர்.. பணம்
தந்தவர் பதக்கம்
பெற்றார்... தொகை
தந்தோர் விருது பெற்றார்..
கவிமுகிலனை யாரும்
அழைக்க வில்லை..

கடைசியாக கவிமுகிலன்
அழைக்கப் பட்டான்...
சான்றிதழ் பெற..
ஆனால்... ஆனால்....
அவன் வரவில்லை..
அவனுக்கு விருது
இல்லை.. திறமைகள்
மதிக்கப் படுவதில்லை..
விரக்தியுடன் என்கடன்
கவிபாடி கிடப்பதே!
என்ற இலக்கோடு.. விழா
அரங்கத்தைக் கடந்து.
பேருந்து நிலையம் நோக்கி
சென்று கொணடிருந்தான்.!
இங்கே.. விருது
வழங்கும் விழா நடந்து
கொண்டிக்கின்றது அங்கே!

**வே.கல்யாண்குமார்**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





*8. குறைகக்கிற நாய் கடிக்காது ஏன் தெரியுமா.?*

*விடை: ஒரே சமயத்தில் இரண்டு வேலையை எப்படி செய்ய முடியும்.*

*9. ஒருத்தன் சர்க்கரை வாங்கிகிட்டு வந்தானாம். ஆனா 100g சர்க்கரை குறைஞ்சு இருந்துச்சாம் ஏன்.?*

*விடை: ஏன்னா நடந்து வந்த Sugar குறைஞ்சிடும்ல அதான்.*

## தினம் ஒரு சமையல்



### எக் மசாலா கறி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 7 | -வேக வைத்த முட்டை |
| 2 | -வெங்காயம் |
| 2 | -தக்காளி |
| சிறியதுண்டு | -இஞ்சி |
| 7 | -பல் பூண்டு |
| 1 ஸ்பூன் | -வெள்ளை எள் |
| 1/2 ஸ்பூன் | -மஞ்சள் |
| 1 ஸ்பூன் | -மிளகாய் தூள் |
| 1 ஸ்பூன் | -மல்லி தூள் |
| 1/2 ஸ்பூன் | -கர மசாலா |
| தேவையானஅளவு | -உப்பு |
| தேவையானஅளவு | -பிரஷ் கிரீம் |
| 1 | -பிரியாணி இலை |
| 2 | -கிராம்பு |
| 1 | -பட்டை |
| 1 | -ஏலக்காய் |
| 3 | -டேபிள்ஸ்பூன்எண்ணெய் |



செய்முறை:

கடாயில் எண்ணெய் விட்டு உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள் சேர்த்து வேக வைத்த 5 முட்டை சேர்த்து சிறிது நேரம் பிரட்டி தனியாக எடுத்து வைத்து கொள்ளவும்.

அதே கடாயில் எண்ணெய் விட்டு பிரியாணி இலை, பட்டை, கிராம்பு, ஏலக்காய் சேர்த்து தாளித்து வெங்காயம் சிறிதாக நறுக்கி சேர்த்து வதக்கவும். பிறகு மிக்ஸியில் வெங்காயம், இஞ்சி,பூண்டு, எள் சேர்த்து அரைத்து எடுத்து கொள்ளவும்.

பிறகு அரைத்ததை இதில் ஊற்றி கலந்து விடவும். தக்காளி சேர்த்து நன்கு கலந்து விடவும். இதில் மிளகாய் தூள்,உப்பு, மஞ்சள் தூள்,மல்லிதூள்,கரமசாலா சேர்த்து வதக்கவும். தக்காளி நன்கு மசித்து வர வேண்டும்.

பிறகு தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கலந்து விடவும். எண்ணெய் விட்டு வரும் வரை மூடி வைத்து வேக வைக்கவும்.

பிறகு பிரட்டி எடுத்த முட்டை சேர்த்து கலந்து விடவும். இதில் பிரஷ் கீரிம் சேர்த்து கலந்து விட்டு பின்னர் வேக வைத்த 2 முட்டை ஒன்றை துருவி எடுத்து இதில் சேர்த்து கலந்து விடவும்.

மூடி வைத்து எண்ணெய் விட்டு வரும் வரை வேக வைத்து கொள்ளவும்.

சூப்பரான எக் மசாலா கறி தயார். நன்றி

## வெள்ளைக்கடம்பு பயன்கள்



வெள்ளைக்கடம்பு (NEOLAMARCKIA CADAMBA) என்பது மருத்துவக் குணங்கள் நிறைந்த மற்றும் வணிக ரீதியாக அதிகப் பயன் தரும் ஒரு மரமாகும். இதன் இலைகள், பட்டை, பூக்கள் என அனைத்துப் பாகங்களும் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதன் முக்கிய பயன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மருத்துவப் பயன்கள்

வெள்ளைக்கடம்பு நீண்டகாலமாக ஆயுர்வேத மற்றும் நாட்டு மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது:

சர்க்கரை நோய்: இதன் இலை, பட்டை மற்றும் வேர் சாறுகள் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகின்றன.

வலி மற்றும் வீக்கம்: இதன் இலைகளில் வலி நிவாரணி மற்றும் வீக்கத்தைக் குறைக்கும் தன்மைகள் உள்ளன. மூட்டு வலி அல்லது வீக்கம் உள்ள இடங்களில் இதன் இலைகளைக் கட்டி வைக்கும் வழக்கம் உள்ளது.

செரிமானப் பிரச்சனைகள்: வயிற்றுப்போக்கு, சீதபேதி மற்றும் செரிமானக் கோளாறுகளைச் சரிசெய்ய இதன் பாகங்கள் மருந்தாகப் பயன்படுகின்றன.

கல்லீரல் பாதுகாப்பு: இதில் உள்ள குளோரோஜெனிக் அமிலம் (CHLOROGENIC ACID) கல்லீரலைப் பாதுகாக்கும் தன்மை கொண்டது.

## ஆர்வக்கோளாறு.. டான்ஸ் ஆடி பல்பு வாங்கிய நடிகை! கலாய்த்த பிரபுதேவா



கல்லூரி ஒன்றின் விழாவுக்காக பிரபுதேவா சென்று இருக்கிறார். அதே நிகழ்ச்சியில் நிக்கி கல்ராணி, ஸ்ரேயா, சாயிஷா, குடும்பஸ்தன் பட புகழ் நடிகை சான்வே மேக்னாவும் வந்து மேடையில் டான்ஸ் ஆடினர்.

மேடையில் பிரபுதேவா டான்ஸ் ஆடிக்கொண்டிருந்த போது நடிகை சான்வே மேக்னாவும் சேர்ந்து ஆடினார். பிரபுதேவா நிறுத்திவிட்ட பிறகும் சான்வே தொடர்ந்து தனியாக ஆடிக்கொண்டே இருந்தார்.

அவரை நிறுத்த சொன்ன பிரபுதேவா 'ஆர்வக்கோளாறு' என சொல்லி கலாய்த்தார். அந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

சினிமா நடிகர்களை அல்லது ஹீரோயின்களை கல்லூரி நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வருவது தான் ட்ரெண்ட் ஆக இருந்து வருகிறது.

அப்படி பல நடிகைகள் கல்லூரி ஆண்டு விழாக்களில் பங்கேற்கும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் அடிக்கடி இணையத்தில் வைரல் ஆகின்றன.

சென்னையில் இருக்கும் பிரபல



## சினிமா

சமீபத்திய அசத்தலான போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். மிருணாளினி ரவி வெளியிட்டுள்ள இந்த புகைப்படங்கள் ரசிகர்களிடையே வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்களை பாருங்க:

## ஜாதி பெருமை பேசியதால் வந்த விமர்சனம்.. நடிகர் பார்த்திபன் எடுத்த புது முடிவு



நடிகர் பார்த்திபன் சமீபத்தில் உஸ்தாத் பகத் சிங் என்ற தெலுங்கு படத்தின் ப்ரீ-ரிலீஸ் நிகழ்ச்சியில் பேசும்போது தான் நாயுடு சமூகத்தை சேர்ந்தவர் என்பதை வெளிப்படையாக மேடையிலேயே கூறினார்.

தமிழ்நாட்டை தாண்டியதும் அவர் ஜாதி பெருமை பேசுவதாக கடுமையான விமர்சனங்கள் எழுந்த நிலையில் அவர் அது பற்றி மன்னிப்பு கேட்டு விளக்கம் கொடுத்தார். தான் தெலுங்கு சமூகத்தை சேர்ந்தவர் என்பதை சொல்லவே அப்படி கூறினேன் என அவர் காரணம் கூறினார்.

தான் விளக்கம் கொடுத்த பிறகும் சமூக வலைத்தளங்களில் தன்னை பற்றி விமர்சனங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் பார்த்திபன் ஒரு புது முடிவை எடுத்து இருக்கிறார்.

ஜாதி, மதம் இல்லாதவர் என சாதி சான்றிதழில் மாற்றம் செய்வதற்காக அவர் விண்ணப்பித்து இருக்கிறாராம். ஆனால் தேர்தல் நேரம் என்பதால் அதிகாரிகள் அந்த மனுவை பின்னர் பரிசீலிப்பதாக கூறி இருக்கிறார்களாம்.

# சதுர்த்தி நாளின் சிறப்புகள்



சதுர்த்தி திதி என்பது விநாயகப் பெருமானுக்குரிய மிகவும் புனிதமான நாளாகும், இது தடைகளை நீக்கி, துன்பங்களை அகற்றி, வாழ்க்கையில் செல்வத்தையும், செழிப்பையும், ஞானத்தையும் அருளும் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு மாதமும் வரும் சங்கடஹர சதுர்த்தி (தேய்பிறை) கஷ்டங்களை போக்கவும், வளர்பிறை சதுர்த்தி வளம் சேர்க்கவும் வழிபடப்படுகிறது.

**சதுர்த்தி நாளின் முக்கிய சிறப்புகள்:**
தடைகள் நீங்கும்: விநாயகரை வழிபடுவதன் மூலம் வாழ்க்கையில் வரும் தடைகள், குழப்பங்கள் மற்றும் கிரக தோஷங்கள் நீங்கி, நன்மைகள் பெருகும்.

**வளர்பிறை சதுர்த்தி:**
ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு அடுத்த நான்காவது நாளில் வரும் இந்த திதியில், வாழ்க்கையில் வளம், நலம், மற்றும் உயர்வுகள் உண்டாக வழிபடப்படுகிறது.
சங்கடஹர சதுர்த்தி: தேய்பிறையில் வரும் இது, அனைத்து கஷ்டங்களையும், சங்கடங்களையும் (சங்கஷ்டி) போக்கும் சிறப்பான நாளாகக் கருதப்படுகிறது.

**அருகம்புல் வழிபாடு:**
சதுர்த்தி நாளில் விநாயகருக்கு அருகம்புல் மாலை சாற்றி வழிபடுவது மிகவும் விசேஷமானது.
விநாயகர் சதுர்த்தி (ஆவணி): விநாயகப் பெருமான் அவதரித்த தினமாகக் கருதப்படும் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி மிகவும் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படுகிறது.

**தவறான சந்திர தரிசனம்:**
சதுர்த்தி அன்று சந்திரனை பார்ப்பது (களங்க சதுர்த்தி) தோஷம் தரும், இதனால் விநாயகரை வழிபட்டு அதை தவிர்க்கலாம். இந்த நாட்களில் விரதம் இருந்து, அருகம்புல் கொண்டு விநாயகரை வேண்டி, கஷ்டங்களில் இருந்து விடுபடலாம்.





ப.கோபிபச்சமுத்து
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# கொகினேனி ரங்க நாயகுலு வரலாறு




கொகினேனி ரங்க நாயகுலு (என். ஜி. ரங்கா நவம்பர் 7, 1909—சூன் 9, 1995) என்பவர் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். இந்திய விவசாயிகள் இயக்கத்திலும் முக்கியப் பங்காற்றினார். அறுபதாண்டுகளாகத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பணி ஆற்றிய காரணத்தால் கின்னஸ் புத்தகத்தில் இவர் பெயர் இடம் பெற்றுள்ளது.

**இளமைக் காலம்**
ஆந்திரப் பிரதேசம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள நிடுபிரலு என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். தொடக்கக் கல்வியைத் தம் சொந்த ஊரிலும் பின்னர் குண்டூரில் ஆந்திர கிறித்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பையும் கற்று முடித்தார். பிறகு இங்கிலாந்துக்குச் சென்று ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் ஆய்வுப்பட்டம் பெற்றார். இந்தியா திரும்பியதும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் துறைப் பேராசிரியராகப் பணி ஆற்றினார். 1930 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி சென்னைக்கு வந்தபோது என்.ஜி. ரங்கா அவரைச் சந்தித்தார். அச்சந்திப்பின் விளைவாக இந்திய விடுதலை உணர்ச்சிப் பெற்றார். சட்டமறுப்பு இயக்கம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டார்.

**உழவர்கள் போராட்டம்**
1933 ஆம் ஆண்டில் ஆந்திராவில் உழவர்கள் போராட்டத்தைத் தலைமைத் தாங்கி நடத்தினார். இந்திய விடுதலைப் போராட்டத்துடன் விவசாயிகள் உரிமைகளுக்காகவும் அனைத்திந்திய அளவில் போராடினார். பன்னாட்டுத் தொழிலாளர் கழகம், உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் ஆகியவற்றின் மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்து கொண்டார்.

**விருதுகளும் சிறப்புகளும்**
என்.ஜி. ரங்காவுக்கு 1991 ஆம் ஆண்டில் பத்ம விபூசண் விருது வழங்கப்பட்டது. 2001 இல் இவருடைய உருவம் பொறிக்கப்பட்ட அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. இவர் பெயரில் விவசாயத்துக்கான விருது ஒன்று புதியதாக நிறுவப்பட்டது. மேலும் குண்டூரில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட்டு கவுரவித்தார்கள்.







# மணிப்பூர்: பல்வேறு குழுக்களை சேர்ந்த 17 பேர் கைது; பயங்கர ஆயுதங்கள் பறிமுதல்

புதுடெல்லி, ஏப்.1:

இந்திய ராணுவம் மற்றும் அசாம் ரைபிள்ஸ் படையினர், மணிப்பூர் போலீசாருடன் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் கடந்த வாரத்தில் முழு அளவில் சோதனையில் ஈடுபட்டனர்.

இதில், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு பிஷ்ணுபூர், சந்தேல், கங்போக்பி, சுராசந்த்பூர் மற்றும் தெங்னவுபோல் மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடத்திய சோதனைகளில் மலை மற்றும் பள்ளத்தாக்கு பகுதிகளில் செயல்பட்டு வந்த பயங்கரவாத குழுக்களை சேர்ந்த 17 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள், வெடிபொருட்கள், துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், மொபைல் போன், சிம் கார்டு, போரில் பயன்படுத்தும் ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.

மணிப்பூரில் கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் இரு குழுக்கள் இடையே ஏற்பட்ட வன்முறை, பல்வேறு மாவட்டங்களுக்கும் பரவியதில் 60-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர். இதனை அடுத்து, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர துணை ராணுவ படையினர் வரவழைக்கப்பட்டனர்.

இதன்பின்னர் வன்முறை பரவாமல் தடுக்கப்பட்டது. எனினும், தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் நடந்து வந்தன. அதனை போலீசார் தடுத்து சூழலை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், போலீசாருடன் இணைந்து ராணுவம் மேற்கொண்ட சோதனையில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பயங்கர ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

# மே.வங்கத்தில் பாஜக வேட்பாளராக வீட்டு வேலை செய்யும் பெண் 2-வது முறையாக போட்டி

ஆஷ்கிராம், ஏப்.1:



மேற்கு வங்க மாநிலம் பூர்பா பர்தமான் மாவட்டத்தில் ஆஷ்கிராம் தொகுதியின் பாஜக வேட்பாளராக வீட்டு வேலை செய்யும் பெண் தொடர்ந்து 2-வது முறையாக களம் இறங்கியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் பூர்பா பர்தமான் மாவட்டம் ஆஷ்கிராம் பகுதியைச் சேர்ந்தவர் கலிதா மாஜி. கணவரின் வருமானம் குறைவாக இருப்பதால், இவர் 2 வீடுகளில் வேலை செய்து மாதம் ரூ.4,000 சம்பாதிக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக இவர்பாஜகவில் உள்ளார்.

இவரை கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலில் ஆஷ்கிராம் தொகுதி வேட்பாளராக பாஜக நிறுத்தியது. ஆனால், அவர் வெற்றிபெறவில்லை.

இந்நிலையில் தற்போது நடைபெறும் தேர்தலிலும் கலிதா மாஜியை மீண்டும் வேட்பாளராக பாஜக அறிவித்துள்ளது. இதுகுறித்து கலிதா மாஜி கூறும்போது, "தேர்தலில் மீண்டும் போட்டியிட பாஜக வாய்ப்பு அளிக்கும் என நினைக்கவில்லை. பாஜக என்மீது நம்பிக்கை வைத்து மிகப் பெரிய பொறுப்பை வழங்கியுள்ளது என்றார்.

# சட்டக்கல்லூரி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கறிஞர் - அதிர்ச்சி சம்பவம்

ராஞ்சி, ஏப்.1:

ஜார்க்கண்ட் மாநிலம் பகூர் மாவட்டத்தில் உள்ள சட்டக்கல்லூரியில் இளம்பெண் சட்டக்கல்வி படித்து வருகிறார். இவருக்கு திருமணமாகி கணவர் உள்ளார்.

இந்நிலையில், மாணவிக்கு கடந்த 7 மாதங்களுக்கு முன் பகூர் மாவட்டத்தை சேர்ந்த வழக்கறிஞர் முர்மு என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. படிப்பு உதவுவதாக கூறி முர்மு மாணவியிடம் பழகியுள்ளார். இதையடுத்து கடந்த சில மாதங்களுக்குமுன் முர்மு வீட்டிற்கு மாணவி சென்றுள்ளார். அங்கு மாணவியை முர்மு பாலியல் வன்கொடுமை செய்து வீடியோவாக எடுத்துள்ளார்.

வீடியோவை சமூகவலைதளத்தில் பதிவிட்டுவிடுவேன் எனக்கூறி மாணவியை கடந்த 7 மாதங்களாக பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதையடுத்து, இந்த சம்பவம் குறித்து மாணவி கடந்த ஞாயிற்றுக்கிழமை போலீசில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கறிஞரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# சிவபெருமான் என்னை அழைக்கிறார் என உருக்கமான கடிதம் எழுதி வைத்துவிட்டு மாணவி மாயம்

நகரி, ஏப்.1:

தெலுங்கானா மாநிலம் மேட்ச்சல் மாவட்டம், மேடுபள்ளி சாயி ஐஸ்வர்யா காலனியைச் சேர்ந்தவர் பெல்லம்கொண்ட சைலஜா. இவரது மகள் மது ஹசிதா (வயது 19). பிளஸ்-2 முடித்துவிட்டு வீட்டில் இருந்து வந்த மது ஹசிதா, நேற்று முன் தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் திடீரென மாயமானார். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய தாய் சைலஜா, மகளை காணாமல் அதிர்ச்சியடைந்து அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தேடினார்.

இதற்கிடையே, வீட்டில் மது ஹசிதா எழுதி வைத்திருந்த உருக்கமான கடிதம் ஒன்று சிக்கியது. அதில், "நான் கடும் மன அழுத்தத்தில் இருக்கிறேன். சிவபெருமான் என்னை அழைக்கிறார், அதனால் நான் சென்று கொண்டிருக்கிறேன்" என எழுதப்பட்டிருந்தது. இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்த தாய், மேடுபள்ளி போலீசில் புகார் அளித்தார். போலீசாரின் முதல்கட்ட விசாரணையில், மாணவி முன்பு வசித்த லாலா பேட்டை பகுதியில் ஒரு வாலிபருடன் பழகி வந்ததும், குடும்பத்தினர் கண்டித்ததால் கடந்த 10 மாதங்களாக அந்த தொடர்பு துண்டிக்கப்பட்டதும் தெரியவந்தது. இதனால் விரக்தியில் இருந்த மது ஹசிதா. கடந்த சில நாட்களாக யாரிடமும் பேசாமல் எப்போதும் தியானத்தில் இருப்பது போலவே இருந்துள்ளார். சிவபெருமான் அழைப்பதாக கூறி மாயமான மாணவியை போலீசார் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

# விமான நிலையத்துக்கு நிலம் விற்ற பணத்தில் ஹெலிகாப்டர் வாங்கிய உ.பி. விவசாயி!

நொய்டா, ஏப்.1:

உத்தர பிரதேசம் மாநிலம் நொய்டாவின் ஜேவார் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு உள்ள சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் தொடங்கி வைத்தார். சுமார் 11,750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த விமான நிலையம் ஆசியாவிலேயே மிகப்பெரிய விமான நிலையம் ஆகும்.

புதிய விமான நிலையத்துக்காக நொய்டாவின் ஜேவார் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டது.

இதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.10 கோடி முதல் ரூ.20 கோடி வரை வழங்கப்பட்டது. இதன் காரணமாக நொய்டாவைச் சேர்ந்த விவசாயிகள் திடீர் பணக்காரர்களாக மாறி உள்ளனர்.

பன்வாரிபாஸ் கிராமத்தைச் சேர்ந்த சிவம் பிரஜாபதி (26) இது குறித்து கூறும்போது, "தனியார் சூரிய மின் உற்பத்தி ஆலையில் தொழிலாளியாக பணியாற்றி வருகிறேன். நொய்டா சர்வதேச விமான நிலையத்துக்காக எனது விவசாய நிலத்தை விற்பனை செய்தேன்.

இதில் எனக்கு ரூ.15 கோடி கிடைத்தது. சொந்தமாக ஹெலிகாப்டர் வாங்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை.


நிலம் விற்ற பணத்தில் புதிதாக ஹெலிகாப்டரை வாங்கி உள்ளேன். மீதமுள்ள பணத்தை பல்வேறு முதலீட்டு திட்டங்களில் டெபாசிட் செய்துள்ளேன்.

இதன் மூலம் மாதந்தோறும் நிறைவான வருவாய் கிடைத்து வருகிறது. தற்போது தொழிலதிபரை போன்று வாழ்ந்து வருகிறேன்.

அடுத்த மாதம் எனது நண்பர்களோடு தாய்லாந்துக்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டு உள்ளேன்" என்றார்.

# இந்தியாவுக்கு வரவேண்டிய 19 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சிக்கித் தவிப்பு!

புதுடெல்லி, ஏப்.1:



கச்சா எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுடன் (எல்பிஜி) இந்தியாவுக்கு வர வேண்டிய 19 சரக்கு கப்பல்கள், ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் தற்போது சிக்கித் தவிப்பதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்தடங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா-இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக, வளைகுடா நாடுகளில் இருந்து எரிசக்தி ஏற்றுமதிக்கு முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியுள்ளது. இந்த நீரிணையைக் கடந்து செல்ல இந்தியா உள்ளிட்ட சில நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும், இதற்காக தங்கள் நாட்டு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் ஈரான் சில தினங்களுக்கு தெரிவித்தது.

இந்தச் சூழலில், மேற்காசிய நிலவரம் குறித்து பல்வேறு அமைச்சங்களுக்கு இடையிலான ஆலோசனைக் கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்தடங்கள் அமைச்சக சிறப்புச் செயலா் ராஜேஷ் சின்ஹா, 'கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜியுடன் இந்தியாவுக்கு வர வேண்டிய 19 கப்பல்கள் ஹோா்முஸ் நீரிணைப் பகுதியில் தற்போது சிக்கித் தவிக்கின்றன' என்றாா்.

அவா் மேலும் கூறுகையில், 'இந்த 19 கப்பல்களில் 10 கப்பல்கள் வெளிநாட்டு கொடியும், 9 கப்பல்கள் இந்தியக் கொடியும் பொருத்தியவையாகும். இக்கப்பல்களில் சுமாா் 500 மாலுமிகள் உள்ளனா். அவா்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனா். இதுவரை இந்தியக் கொடி பொருத்திய 8 கப்பல்கள் ஹோா்முஸ் நீரிணையைப் பாதுகாப்பாக கடந்து வந்துள்ளன. கடந்த 2 நாள்களில் மட்டும் 94,000 டன் எல்பிஜியுடன் இரண்டு கப்பல்கள் இந்தியாவை வந்தடைந்துள்ளன.

இந்தியக் கொடி பொருத்திய கப்பல்களை மீட்பதே நமது முன்னுரிமையாகும். மேற்காசிய பிராந்தியத்தில் நிலவும் நிலையற்ற சூழலை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். வளைகுடா பகுதிகளில் இருந்து கொள்முதலுக்காக மீண்டும் கப்பல்களை அனுப்பத் தொடங்கும் நிலையை நாம் இன்னும் எட்டவில்லை' என்றாா்.

பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவுக்கு இடையிலான ஹோா்முஸ் நீரிணைப் பகுதியில் மொத்தம் 500 கப்பல்கள் சிக்கித் தவிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது

# எம்எல்சி பதவியை ராஜினாமா செய்தார் நிதிஷ் குமார்

பாட்னா, ஏப்.1:

பிஹாரில் மிக நீண்ட காலம் முதல்வராக பதவி வகித்தவர் எனற பெருமைக்குரியவர் நிதிஷ் குமார்.

ஐக்கிய ஜனதா தளம் தலைவரான அவர், மத்திய அரசியலுக்கு செல்ல முடிவு செய்தார். இதையடுத்து கடந்த 16ம் தேதி நடைபெற்ற மாநிலங்களவை தேர்தலில் வெற்றி பெற்று எம்.பி. ஆனார். இந்நிலையில் அவர் தனது சட்ட மேலவை உறுப்பினர் (எம்எல்சி) பதவியை நேற்று ராஜினாமா செய்தார். எனினும், முதல்வர் பதவியை இன்னும் ராஜினாமா செய்யவில்லை. இந்நிலையில் மாநிலங் களவை உறுப்பினராக நிதிஷ்குமார், ஏப்ரல் 9ம் தேதி பதவியேற்கலாம் எனத் தெரிகிறது.

# லாக்கரில் வாடிக்கையாளர்கள் வைத்துள்ள பொருள்களை வங்கிகள் கண்காணிக்காது: நிர்மலா சீதாராமன்

புதுடெல்லி, ஏப்.1:



மக்களவையில் காங்கிரஸ் எம்.பி.நாம்தேவ் தசராம் கிர்சான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியதாவது: வங்கிகளின் லாக்கரில் மதிப்புமிக்க பொருள்களை வாடிக்கையாளர்கள் பாதுகாப்பாக வைக்கின்றனர். அந்தப் பொருள்களின் மதிப்பை கணக்கிடுவதோ அல்லது பதிவு செய்வதோ வங்கிவிதிகளை மீறும் செயல் என்பதால் எந்த வங்கியும் அதில் ஈடுபடுவதில்லை.

லாக்கரில் வைக்கப்படும் பொருள்களுக்கு ஆண்டு பாதுகாப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒருவேளை லாக்கரில் உள்ள பொருள்களை ஏதேனும் எதிர்பாராத சூழலில் வாடிக்கையாளர் இழக்க நேரிட்டால் அவர் அளிக்கும் ஆண்டுக் கட்டணத்தின் 100 மடங்கு தொகை இழப்பீடாகத் தரப்படும்.

ஒவ்வொரு லாக்கரிலும் உள்ள மதிப்புமிக்க பொருள்களை வங்கிகள் மதிப்பீடோ ஆய்வோ செய்யாது. அதனால் அவற்றை வாடிக்கையாளர் இழக்க நேரிட்டால் காப்பீடு வழங்குவது மிகக் கடினம். தற்போது இந்த விதிகளை மாற்றுவது தொடர்பாக பரிசீலிக்கவில்லை.

இந்திய ரூபாய்க்கு பாதிப்பில்லை: ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையே பிப். 28-ஆம் தேதிமுதல் தொடர்ந்து வரும் மோதலால் மேற்காசியாவில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இதன் காரணமாக அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு மார்ச் 27-ஆம் தேதி வரை 4 சதவீதம் சரிந்து ரூ.94.82-ஆனது.

இருந்தபோதிலும் இந்திய ரூபாய்க்கு எவ்வித பெரும் பாதிப்பும் இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டது.

# "பிரதமர் மோடியின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் பினராயி விஜயன்" - ராகுல் காந்தி சாடல்



திருவனந்தபுரம், ஏப்.1:

இருநாள் பிரச்சாரப் பயணமாக கேரளா வந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி இன்று பத்தினம்திட்டா, புதுப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் அவர் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியது: "கேரள சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி மார்க்சிஸ்ட் கட்சியும் பாஜகவும் ரகசிய கூட்டணியை அமைத்துள்ளன. இந்த ரகசிய கூட்டணிக்கும் காங்கிரஸ் கூட்டணிக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக என் மீது 36 வழக்குகள் தொடரப்பட்டு உள்ளன. என்னிடம் 55 மணி நேரம் இடைவிடாமல் விசாரணை நடத்தப்பட்டது. ஆனால் ஊழலில் திளைத்து வரும் மார்க்சிஸ்ட் தலைமை மீது மத்திய அரசு விசாரணை நடத்தவில்லை. கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு மத்திய அரசு எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கவில்லை. சபரிமலை ஐயப்பன் கோயிலில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்று உள்ளன. பிரதமர் நரேந்திர மோடி பாலக்காட்டில் பிரச்சாரம் செய்தபோது சபரிமலை ஊழல் விவகாரம் குறித்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. மார்க்சிஸ்ட் கட்சிக்காக அவர் மவுனம் காக்கிறார். மார்க்சிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் கேரளத்தின் பொருளாதாரம் பின்னடைவை சந்தித்து வருகிறது. ஆளும் மார்க்சிஸ்ட் கட்சி தொழிலாளர்களின் நலனுக்காக போராடுவதாக கூறுகிறது. ஆனால் ரப்பர் தோட்ட தொழிலாளர்களின் நலன்களில் மார்க்சிஸ்ட் தலைவர்கள் துளியும் அக்கறை செலுத்தவில்லை. அதற்கு மாறாக ரப்பர் தோட்ட முதலாளிகளின் நலனில் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றனர்.

சர்வதேச அரங்கில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியை கட்டுப்படுத்தி வருகிறார். ட்ரம்ப்பின் கைப்பாவையாக பிரதமர் மோடி செயல்பட்டு வருகிறார். அதேபோல கேரள முதல்வர் பினராயி விஜயன், பிரதமர் மோடியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளார்" என்று ராகுல் காந்தி பேசினார்.

# 2025-ம் ஆண்டில் 431 பேர் பாம்பு கடித்து உயிரிழப்பு: மத்திய அரசு



புதுடெல்லி, ஏப்.1:

காங்கிரஸ் உறுப்பினர் பிரபா மல்லிகார்ஜுன் எழுப்பிய ஒரு கேள்விக்கு, மத்திய சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: நாட்டில் பாம்பு கடியால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த 2023-ல் 183-ஆக இருந்த இது, 2024-ல் 370-ஆக உயர்ந்து. இது, கடந்த 2025-ல் 431-ஆக மேலும் அதிகரித்துள்ளது. மாநில வாரியான புள்ளி விவரங்களின்படி, கர்நாடகத்தில் தான் அதிகபட்சமாக கடந்த ஆண்டில் 157 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

# சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வு இந்தி, ஆங்கிலத்தில் மட்டும் நடத்தப்படுவது ஏன்?

புதுடெல்லி, ஏப்.1:

திமுக எம்.பி.வில்சன் மாநிலங்களவையில் பூஜ்ஜிய நேரத்தில் பேசியதாவது: யுபிஎஸ்சி-யின் சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வு இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படுகிறது.

இதனால் தென்னிந்தியா மற்றும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த திறமையான தேர்வர்கள் முதல் சுற்றிலேயே வெளியேற்றப்படுகிறார்கள். இதனால் அனைத்துமாணவர்களுக்கும் சம வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே தமிழ் உட்பட அனைத்து 22 மொழிகளிலும் சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட வேண்டும். யுபிஎஸ்சி தேர்வுக்கான மதிப்பெண் வழங்கும் முறையில் ஆங்கிலத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகும், நேர்காணலில் மாணவர்களுக்கு மிகக் குறைந்த மதிப்பெண்களே கிடைக்கிறது. ஓபிசி, எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு இது மிகவும் பொருந்தும். மேலும், தேர்வு நடைமுறை முழுமையாக நிறைவடைய 15 மாதங்கள் ஆகின்றன. ஒரு மாணவர் தோல்வி அடைந்தால், அவருடைய முழு ஆண்டும் வீணாகி விடுகிறது. எனவே, யுபிஎஸ்சி முதல்நிலைத் தேர்வை ஆண்டுக்கு 2 முறை நடத்த வேண்டும். இவ்வாறு எம்.பி. வில்சன் மாநிலங்களவையில் பேசினார்.

மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் சமீபத்தில் ஒரு கேள்விக்கு அளித்த பதிலில், "சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வுக்கு பிறகு, அதற்கான தற்காலிக விடைக்குறிப்பை யுபிஎஸ்சி, தனது இணையதளத்தில் வெளியிடும். உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை, 2026-ம் ஆண்டு நடைபெறும் சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வில் இருந்து தொடங்கும்" என்றார்.

# முக்கிய நக்சலைட் சரண்: அதிகளவில் ஆயுதம் பறிமுதல்

அமராவதி, ஏப்.1:

ஆந்திர மாநிலம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், பாதுபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் சோமண்ணா என்கிற நாராயண ராவ். இவர் 1990-களில் நக்சலைட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தேசிய அளவில் அந்த இயக்கத்தில் முக்கிய நிர்வாகியாகவும், மூளையாகவும் செயல்பட்டு வந்தார். இவரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்தால் கோடிக்கணக்கில் பரிசு வழங்கப்படும் என ஆந்திரா, தெலங்கானா, ஒடிஷா உள்ளிட்ட மாநில அரசுகள் அறிவித்துள்ளன. இந்நிலையில், சோமண்ணா உள்ளிட்ட பலர் ஆந்திர டிஜிபி முன்னிலையில் நேற்று சரண் அடைந்தனர். அப்போது ஏகே 47 உட்பட பல ஆயுதங்களை அவர்கள் போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.




# பூந்தமல்லி தவெக வேட்பாளர் பாலியல் தொல்லை அளித்ததாக எஸ்.பி. அலுவலகத்தில் மகளிரணி நிர்வாகி புகார்

**திருவள்ளூர், ஏப்.01:** பூந்தமல்லி சட்டப்பேரவை தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் தனக்கு பாலியல் தொல்லை அளித்ததாக, அக்கட்சியின் மகளிர் அணி நிர்வாகி திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளராக இருப்பவர் பிரகாசம் என்கிற குட்டி. இவரை நேற்று முன் தினம் பூந்தமல்லி (தனி) தொகுதியின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளராக, அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்தார்.

இந்நிலையில், பிரகாசம் தனக்கு பாலியல் தனக்கு பாலியல் தொல்லை அளித்ததாக, அக்கட்சியின் மகளிர் அணி நிர்வாகி நேற்று திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் அளித்த புகாரில் தெரிவித்துள்ளதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி நிர்வாகியாக நான் இருந்து வருகிறேன்.

இந் நிலையில், கடந்த ஜூன் 8-ம் தேதி திருவள்ளூரில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நடந்த எங்கள் கட்சி நிர்வாகியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பங்கேற்றார்.

அந்நிகழ்வில் நானும் பங்கேற்றேன். அப்போது, விழா மேடையில், எங்கள் கட்சியின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளர் பிரகாசம் அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது, பிரகாசம் எனக்கு பாலியல் தொல்லை கொடுத்தார்.

இதுகுறித்து, தட்டிக்கேட்ட என் கணவருக்கும், எனக்கும் பிரகாசம் கொலை மிரட்டல் விடுத்தார். இதுதொடர்பாக எங்கள் கட்சியின் தலைமையிடம் புகார் அளித்துள்ளேன்.

ஆனால், அவர் மீது கட்சி தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, பிரகாசம் மீது வழக்குப் பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் புகாரில் தெரிவித்துள்ளார்.

இப்புகாரை மறுத்து, பிரகாசத்தின் மனைவி சுகுணா, மகளிர் அணி நிர்வாகிகள் திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் நேற்று மனு அளித்தனர்.

அதில், "தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட மகளிர் அணியின் முக்கிய நிர்வாகி பதவியை வாங்கி தரக் கோரி, மகளிர் அணி நிர்வாகி பிரகாசத்திடம் பிரச்சினை செய்து வந்தார்.

அப்பதவியை வாங்கி தராததால் பிரகாசம் மீது அவர் பொய்யான புகார் தெரிவித்துள்ளார். கட்சியில் உள்ள ஒரு சிலரே பிரகாசத்துக்கு எதிராக அந்த பெண் நிர்வாகியை தூண்டி விட்டுள்ளனர். ஆகவே, பொய்யான புகார் கொடுத்த பெண் நிர்வாகி மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருசக்கர வாகனத்தை குறுக்கே நிறுத்தியதால் மோதல்: வீடு புகுந்து சூறையாடிய அக்கா - தம்பி உட்பட 7 பேர் கைது

**சென்னை, ஏப்.01:** இருசக்கர வாகனத்தை அடுக்கு மாடிக் குடியிருப்பின் வழிப்பாதையில் நிறுத்திய விவகாரத்தில் இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக வீடு புகுந்து பொருட்களை சூறையாடிய 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

சாலிகிராமம், அபுசாலி தெருவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பின் முதல் தளத்தில் சுவர்ணலட்சுமி (42) என்பவர் குடும்பத்துடன் வசிக்கிறார். கடந்த 28-ம் தேதி மதியம், அவர்களது குடியிருப்பின் கேட் முன்னால் அடையாளம் தெரியாத நபர் அவரது இருசக்கர வாகனத்தை வழியில் நிறுத்திவிட்டு சென்றார். இதனால் யாரும் குடியிருப்புக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.


இதனால் கோபம் அடைந்த சுவர்ணலட்சுமி சம்பந்தப்பட்ட வாகனத்தை இரும்புச் சங்கிலியால் பூட்டினார். சிறிது நேரம் கழித்து 2 பெண்கள் வந்து, 'யார் எங்கள் வாகனத்தை சங்கிலியால் பூட்டி வைத்துள்ளது' எனக் கேட்டபோது, சுவர்ணலட்சுமியும் அவரது தாயாரும் 'நாங்கள்தான் பூட்டினோம், இப்படி வாசலில் நிறுத்தினால் நாங்கள் எப்படி செல்வது, இனிமேல் இங்கு வாகனத்தை நிறுத்தாதீர்கள்' எனக்கூறி சங்கிலியின் பூட்டைத் திறக்க சாவியைக் கொடுத்தனர்.

ஆனால் அவர்கள் வாக்குவாதம் செய்தனர். இதில் இரு தரப்பினரிடையே கைகலப்பு ஏற்பட்டது. பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர். சிறிது நேரத்தில் தகராறு செய்த பெண்ணின் தம்பி உட்பட சிலர் சுவர்ணலட்சுமியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, கிரிக்கெட் மட்டை மற்றும் கம்பால் வீட்டிலிருந்த டிவி, கண்ணாடி உள்ளிட்ட பொருட்களை உடைத்து, வீட்டிலிருந்த பொருட்களை சூறையாடிவிட்டுத் தப்பினர்.

இது தொடர்பாக சுவர்ணலட்சுமி விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து வீடு புகுந்து சூறையாடிய திருவல்லிக்கேணி நடுக்குப்பத்தைச் சேர்ந்த ஷர்மிளா (25), அவரது தம்பி பவேஷ் (23), அயனாவரம் புதுநகர் ஆனந்த் (36), வில்லிவாக்கம் சிட்கோ நகர் தீபக் (20), கொரட்டூரைச் சேர்ந்த முத்துப்பாண்டியன் (27), வில்லிவாக்கம் ஐகோர்ட் காலனி பலராம் (36), கொரட்டூர் எம்ஜிஆர் தெருவைச் சேர்ந்த ராஜு (28) ஆகிய 7 பேரைக் கைது செய்து விசாரித்து வருகின்றனர்

# கொடைக்கானலில் 200 அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து: ஒருவர் பலி; 4 பேர் படுகாயம்



**பழநி, ஏப்.01:** திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகே மலைச் சாலையில் 200 அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

சென்னையில் இருந்து காரில் 6 பேர் நேற்று கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்றுள்ளனர். கொடைக்கானல் மேல்மலை கிராமமான கூக்கால் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் தங்கியுள்ளனர். இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 4 மணிக்கு காரில் கொடைக்கானலை சுற்றி பார்க்க சென்றுள்ளனர்.

பூம்பாறை அருகே 'பழநி வியூ' பகுதியில் சென்ற போது, கார் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, 200 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 4 பேர் பலத்த காயத்துடனும், ஒருவர் லேசான காயத்துடனும் உயிர்தப்பியுள்ளனர்.

விபத்து குறித்து தகவலறிந்த கொடைக்கானல் தீயணைப்பு துறையினர் மற்றும் காவல்துறையினர், பொதுமக்கள் உதவியுடன் 200 அடி பள்ளத்தில் இருந்து விபத்தில் சிக்கியவர்களை மீட்டு கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

மேலும், விபத்து குறித்து கொடைக்கானல் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்து நடந்த பகுதியான மலைச்சாலையில் தடுப்பு சுவர் இல்லாததால் அடிக்கடி இதுபோன்று விபத்துகள் நடப்பதாக அப்பகுதி மக்கள் கூறினர்.

# உதகையில் தோடர் பழங்குடியினர் கோயில் கும்பாபிஷேக திருவிழா: பாரம்பரிய நடனமாடி வழிபாடு



**ஊட்டி, ஏப்.01:** ஊட்டி அருகே உள்ள தோடர் பழங்குடியின மக்களின் கோயிலில், நார்ஸ்னர்ஸ் எனப்படும் கும்பாபிஷேக திருவிழா நடைபெற்றது. 30 ஆண்டுகளுக்கு பின் நடைபெற்ற இத்திருவிழாவில், 60-க்கும் மேற்பட்ட கிராமங்களை சார்ந்த நூற்றுக்கணக்கான தோடர் பழங்குடியின மக்கள் பங்கேற்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் தோடர், கோத்தர், இருளர், குறும்பர், காட்டு நாயக்கர், பணியர் ஆகிய ஆறு வகையான பண்டைய பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.

இதில் தோடர் பழங்குடியின மக்கள் மந்து என்று அழைக்கப்படும் கிராமங்களில் வசித்து தனி கலாச்சாரத்தை கடைப்பிடித்து வாழ்ந்து வருகின்றனர். ஊட்டி அருகே உள்ள மார்லி மந்தில் 10-க்கும் மேற்பட்ட தோடர் பழங்குடியின குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் 1952ம் ஆண்டு பாரம்பரிய முறைப்படி புல், மூங்கில் மற்றும் பிரம்பு ஆகியவறை கொண்டு பிறை வடிவிலான கோயிலை உருவாக்கி வழிபட்டு வருகின்றனர். 74 ஆண்டுகள் பழமையான இந்த கோயிலின் கூரை மற்றும் நுழைவாயில் பகுதி 30 ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்து வந்தது.

இக்கோயிலின் கூரை மற்றும் நுழைவுவாயில் பகுதியை மாற்ற தோடர் பழங்குடியினர் முடிவு செய்தனர். இதனையடுத்து ஆண்கள் அனைவரும் விரதம் மேற்கொண்டு அப்பர் பவானி மற்றும் கோரகுந்தா வன பகுதிகளுக்கு சென்று அவ்வுல் என்ற புற்கள், மூங்கில் மற்றும் பிரம்பு போன்ற பொருட்களை கொண்டு வந்து கடந்த இரண்டு மாதங்களாக புதுப்பிக்கும் பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

கோயிலின் கூரையை மாற்றி புதிய புற்கள் வேயப்பட்டு நுழைவுவாயில் பகுதி பழமை மாறாமல் வடிவமைக்கபட்டது. இப்பணிகள் நிறைவடைந்த நிலையில், நார்ஸ்னர்ஸ் எனபடும் கும்பாபிஷேக திருவிழா நேற்று முன்தினம் மாலை நடந்தது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 60-க்கும் மேற்பட்ட மந்துகளை சேர்ந்த தோடர் பழங்குடியின ஆண்கள் தங்களது பாரம்பரிய உடையுடன் கும்பாபிஷேக விழாவில் பங்கேற்று, பாடல்களைப் பாடி, காணிக்கை செலுத்தி சிறப்பு வழிபாடு செய்தனர்.

தொடர்ந்து, தோடர் பழங்குடியின ஆண்கள் கோயில் முன் வட்டமாக நின்று, கைகளைக் கோர்த்தவாறு கலாச்சார நடனமாடினர்.

# 'டெட்' தேர்வுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு பணிச் சான்று: கல்வி அதிகாரிகளுக்கு இயக்குநர் உத்தரவு



**சென்னை, ஏப்.01:** டெட்' தேர்வுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு தாமதமின்றி பணிச் சான்று வழங்குமாறு மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு தொடக்கக் கல்வி இயக்குநர் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுதொடர்பாக, மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தொடக்கக் கல்வி இயக்குநர் நரேஷ், மின்னஞ்சலில் அனுப்பியுள்ள சுற்றறிக்கை விவரம்:

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதிப் பிரிவு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் கடந்த 2015 செப்.1-ம் தேதி அல்லது அதற்கு முன்னர் இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், பகுதிநேர ஊதியம் அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 'டெட்' தகுதித் தேர்வு நடத்தப்பட உள்ளது. இதற்கு விண்ணப்பிக்க ஏப்.10-ம் தேதி கடைசி நாள் என ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

மேற்கண்ட ஆசிரியர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க, பணிச் சான்றை பதிவேற்றம் செய்வது அவசியம். எனவே, அவர்களுக்கான பணிச் சான்றை ஏப்.10-ம் தேதிக்கு முன்பு வழங்க அனைத்து மாவட்ட, வட்டாரக் கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதில் தாமதம் ஏற்பட்டு ஆசிரியர்கள் டெட் தேர்வுக்கு விண்ணப்பிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட, வட்டாரக் கல்வி அதிகாரிகள் தான் பொறுப்பேற்க நேரிடும். எனவே, இதில் தனி கவனம் செலுத்தி, காலம் தாழ்த்தாமல் ஆசிரியர்களுக்கு பணிச் சான்று வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புழுதிவாக்கம் ரயில் நிலைய லிப்டில் சிக்கிய 17 பேர் மீட்பு: ரயில்வே அவசர எண் இயங்கவில்லை என குற்றச்சாட்டு



**சென்னை, ஏப்.01:** ஆதம்பாக்கம் பகுதியில் வசிப்பவர் சங்கர். இவரது மனைவி சாந்தி. இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் திருவல்லிக்கேணி சென்றனர். பின்னர், அங்கிருந்து பறக்கும் ரயில் மூலம், ஆதம்பாக்கம் அருகே அமைந்துள்ள புழுதிவாக்கம் ரயில் நிலையத்துக்கு இரவு 9:30 மணிக்கு வந்தனர்.

அங்கிருந்து இருவரும் மின்தூக்கி (லிஃப்ட்) மூலமாக கீழே இறங்க முடிவு செய்தனர். அங்கு ஏற்கெனவே, 15 பேர் காத்திருந்தனர். அவர்கள் அனைவரும் மின்தூக்கி வந்தவுடன் அதில் ஏறினர்.

மின்தூக்கி புறப்பட்ட சில நொடியில் 2-வது மாடிக்கும் - முதல் மாடிக்கும் இடையே பாதியிலேயே நின்றது. இதில் பயணம் செய்த 17 பேரும் சிக்கித் தவித்தனர். மேலும், உதவி கேட்டு குரல் எழுப்பினர்.

இருப்பினும் யாரும் வரவில்லை. இதையடுத்து, தெற்கு ரயில்வே நிர்வாகத்துக்கும், மின் தூக்கியில் ஒட்டப்பட்டிருந்த அவசர உதவி எண்ணுக்கும் தொடர்ந்து தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர். ஆனால், எந்தவித உதவியும் கிடைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து, சங்கர் செல்போன் மூலமாக, தனது நண்பரை அழைத்து அவர் மூலம் காவல்துறை அவசர உதவிக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார்.

இதன் பேரில், அடுத்த 15 நிமிடத்தில், வேளச்சேரி தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலைய அதிகாரி பிரபாகரன் தலைமையிலான 5 தீயணைப்பு மற்றும் மீட்பு பணி வீரர்கள் புழுதிவாக்கம் ரயில் நிலையத்துக்கு வந்தனர்.

பின்னர், நீண்ட போராட்டத்துக்குப் பின், தீயணைப்பு துறை வீரர்கள் 2-வது தளத்தில் உள்ள மின்தூக்கி நுழைவு வாயிலை திறந்து, அதன் வாயிலாக மின் தூக்கி மேற்பகுதிக்கு சென்று, அதில் பொருத்தப்பட்டிருந்த மின் விசிறியை அகற்றினர்.

பின்னர், அதன் வழியாக முதலில் 4 குழந்தைகளை மிகவும் பத்திரமாக மீட்டனர். பின்னர் மற்ற 13 பேரையும் மீட்டனர். இதுகுறித்து, ரயில் பயணிகள் கூறுகையில், "தெற்கு ரயில் வேயின் அவசர எண்ணுக்கு தொடர்பு கொண்டாலும் எந்த பதிலும் இல்லை.

மின்தூக்கியில் ஒட்டப்பட்ட உதவி எண்ணும் இயங்கவில்லை. சிறிது தாமதம் ஏற்பட்டு இருந்தால் கூட விபரீதம் ஏற்பட்டிருக்கும். ரயில்வே நிர்வாகம் இனிமேலாவது கவனமாக செயல்படவேண்டும். ரயில் நிலையத்தில் பயணிகளின் அடிப்படை வசதிகளை முறையாக பராமரிக்க வேண்டும்.

அப்போது தான் இது போன்ற பிரச்சினை ஏற்படாமல் தவிர்க்க முடியும்" என்றனர். இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரியிடம் கேட்டபோது, "மின் தூக்கி தான் பிரச்சினை. இதை பராமரிக்கும் தனியார் நிறுவனத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்" என்றார்.

# வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையம் அருகே சிக்னல் பிரச்சினையால் ரயில் சேவை பாதிப்பு: பயணிகள் கடும் அவதி



**சென்னை, ஏப்.01:** வியாசர்பாடி ஜீவா நிலையம் அருகே ஏற்பட்ட சிக்னல் பிரச்னையால், 35 நிமிடங்கள் வரை மின்சார ரயில் சேவை பாதிக்கப்பட்டது. இதனால், பயணிகள் கடும் அவதிக்கு உள்ளாகினர்.

சென்னை புறநகர் மின்சார ரயில் சேவையில், சென்ட்ரல் - அரக்கோணம் வழித்தடம் முக்கியமானதாகும். இத்தடத்தில், நாள்தோறும் 200-க்கும் மேற்பட்ட மின்சார ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இதில் லட்சக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர்.

இந்நிலையில், வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையம் அருகே நேற்று பிற்பகலில் திடீரென சிக்னல் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து, ஆவடியில் இருந்து சென்னை கடற்கரை நோக்கி சென்ற மின்சார ரயிலும், இதன் பின்னால் சென்ட்ரல் நோக்கி வந்து கொண்டிருந்த மின்சார ரயிலும் வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.

இதற்கிடையில், சிக்னல் பிரச்சினை தொடர்பாக, ரயில்வே அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலின் பேரில், அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, தொழில்நுட்பக்கோளாறை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் 30 நிமிடங்கள் போராடி சிக்னலில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறை சரி செய்தனர். இதையடுத்து, மின்சார ரயில்கள் மீண்டும் சீராக இயங்கத் தொடங்கியது. இப்பிரச்சினையால், மின்சார ரயில் சேவை அரைமணி நேரத்துக்கு மேலாக பாதிக்கப்பட்டது.


ஏற்கனவே, இவ்வழித் தடத்தில் பராமரிப்பு காரணமாக 65 ரயில் சேவைகள் ஓராண்டுக்கு முன்பு நிறுத்தப்பட்டது. இதனால், 20 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படுவதால் பயணிகள் தினமும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, இதுபோன்று அவ்வப்போது ஏற்படும் சிக்னல் பிரச்சினை காரணமாக ரயில் பயணிகள் மேலும் அவதிக்குள்ளாகின்றனர்.

இது குறித்து, ரயில்வே அதிகாரி ஒருவர் கூறுகையில், "வண்ணாரப்பேட்டை - வியாசர்பாடி ஜீவா நிலையம் இடையே ஏற்பட்ட சிக்னல் பிரச்சினை காரணமாக, மின்சார ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. சிக்னலில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு சரி செய்த பிறகு, மின்சார ரயில் சேவை மீண்டும் சீரானது" என்றார்.

# துணை கலெக்டர், போலீஸ் டிஎஸ்பி உள்ளிட்ட குரூப் 1 பதவிக்கான மெயின் தேர்வு ரிசல்ட் வெளியீடு

**வரும் 15ம் தேதி நேர்முக தேர்வு தொடக்கம்**



**சென்னை, ஏப்.01:** துணை கலெக்டர், போலீஸ் டிஎஸ்பி உள்ளிட்ட குரூப் 1 பதவிக்கான மெயின் தேர்வு ரிசல்ட்டை டிஎன்பிஎஸ்சி நேற்று வெளியிட்டது. நேர்முகத்தேர்வு வருகிற 15ம் தேதி தொடங்குகிறது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) குரூப் 1 பதவியில் காலியாக உள்ள 78 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி வெளியிட்டது. இதில், துணை கலெக்டர் 28 இடங்கள், போலீஸ் டிஎஸ்பி 7 இடம், வணிகவரி உதவி ஆணையர் 19, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் 15, மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி 3, தொழிலாளர் நல உதவி ஆணையர் 6 ஆகிய பணியிடங்கள் அடங்கும். Urban Transit

அதோடு உதவி வனப் பாதுகாவலர் 2 காலியிடங்களுக்கான குருப் 1ஏ அறிவிப்பும் வெளியிடப்பட்டது. இத்தேர்வுக்கான முதல்நிலை தேர்வு கடந்த ஜூன் மாதம் 15ம் தேதி நடந்தது. இத்தேர்வை 1 லட்சத்து 86 ஆயிரம் 128 பேர் எழுதினர். தொடர்ந்து ஆகஸ்ட் 28ம் தேதி ரிசல்ட் வெளியிடப்பட்டது. இதில் தற்காலிகமாக 1801 பேர் மெயின் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கான குரூப் 1 மெயின் தேர்வு கடந்த டிசம்பர் 1, 2ம் தேதி, 3ம் தேதி தேதி, 4ம் தேதி வரை நடந்தது.

சென்னை கே.கே.நகர் அரசு மேல்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி என்கேடி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி தி முஸ்லிம் அரசு மேல்நிலைப்பள்ளி, தி.நகர் கர்நாடக சங்கீதா மேல்நிலைப்பள்ளி, வேப்பேரி பெண்டிக் பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்பட சென்னையில் 18 இடங்களில் தேர்வு கூடங்களில் இந்த தேர்வு நடந்தது. இத்தேர்வை 1568 பேர் மட்டுமே எழுதினர்.

அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பே வாக்குசேகரிப்பு, அனுமதியின்றி ரோடு ஷோ பெரம்பூர், கொளத்தூர் பிரசாரத்தில் விஜய் விதிமீறல்: பெண்கள், குழந்தைகள் மயங்கி விழுந்ததால் பரபரப்பு'

இந்நிலையில் மெயின் தேர்வுக்கான ரிசல்ட்டை டிஎன்பிஎஸ்சி நேற்று வெளியிட்டது. இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி நேற்று வெளியிட்ட அறிவிப்பு:குரூப் 1 மெயின் தேர்வுக்கு 1,801 தேர்வர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் 1568 பேர் மட்டுமே தேர்வு எழுதினர். இவர்களுக்கான மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்தேர்வுக்கான 160 தேர்வர்களின் பதிவெண் கொண்ட பட்டியல் www.tnpsc.gov.in என்ற தேர்வாணைய இணையதள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்தேர்வு வருகிற 15 மற்றும் 16ம் தேதிகளில் நடைபெறும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களை www.tnpsc.gov.in எனும் இணையதள பக்கத்தில் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# செட்டிகுளம் தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திருக்கல்யாண உற்சவம் கோலாகலம்!




பாடாலூர், ஏப்.01: ஆலத்தூர் தாலுகா செட்டிகுளம் தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திருக்கல்யாண உற்சவம் இன்று நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா செட்டிகுளத்தில் வடபழனி என்றழைக்கப்படும் தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி உத்திர திருவிழா கடந்த 24-ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. மேலும் விழா நாட்களில் ஒவ்வொரு நாளும் இரவில் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெற்று வருகிறது. விழாவின் 7-ம் நாளான இன்று மலையடிவாரத்தில் உள்ள தண்டாயுதபாணி தண்ணீர் பந்தலில் சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

இதையொட்டி காலை 10 மணிக்கு மூலவர் தண்டாயுதபாணிக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார வழிபாடு நடந்தது. இரவு 8.35 மணியளவில் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்த உற்சவர் முருகனுக்கு, வள்ளி, தெய்வானையுடன் திருக்கல்யாண உற்சவம் நடத்தப்பட்டு, தீபாராதனை காட்டப்பட்டது. இதையடுத்து மயில் வாகனத்தில் மேளதாளம் முழங்க சுவாமி திருவீதி உலாவும் நடந்தது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் கூத்தனூர் கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர். திருக்கல்யாண உற்சவத்தில் கூத்தனூர், நாட்டார்மங்கலம், செட்டிகுளம், இரூர், பாடாலூர், குரூர், பொம்மனப்பாடி போன்ற கிராமங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தனர்.

அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நாளை (செவ்வாய்க்கிழமை) இரவு 9 மணிக்கு சிவன் கோயிலில் இருந்து குதிரை வாகனம், வெள்ளி மயில் வாகனம் மற்றும் அலங்கார பல்லாக்கில் சுவாமி வீதி உலா நடக்கிறது. விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் நாளை மறுநாள் (புதன்கிழமை) மாலை 4.00 மணிக்கு தேர் வடம் பிடித்து இழுக்கப்படுகிறது.

# தாம்பரம் திமுகவில் அதிருப்தி: எஸ்.ஆர். ராஜாவை சந்தித்தார் புதிய வேட்பாளர்



தாம்பரம், ஏப்.01: தாம்பரம் தொகுதி வேட்பாளராக கிருத்திகா தேவி அறிவிக்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவே எம்எல்ஏ.வாக உள்ள எஸ்.ஆர்.ராஜா ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ளது.

இந்நிலையில் எஸ்.ஆர்.ராஜாவை புதிய வேட்பாளர் சந்தித்து வாழ்த்து பெற்றார். தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தாம்பரம் தொகுதியின் தற்போதைய எம்எல்ஏ.வாக உள்ள எஸ்.ஆர்.ராஜாவுக்கு இம்முறை போட்டியிட சீட் வழங்கவில்லை. புதுமுகமான மருத்துவர் கிருத்திகா தேவிக்கு சீட் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சி அடைந்த எஸ்.ஆர்.ராஜா ஆதரவாளர்கள் முற்றுகைப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்நிலையில், நேற்று தாம்பரம் வந்த ஆ.ராசா, எம்.பி., எம்எல்ஏ எஸ்.ஆர்.ராஜா மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது "தலைமை அறிவித்துள்ளதால் அனைவரும் ஒற்றுமையாக இருந்து கட்சி வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என ஆ.ராசா அறிவுறுத்தினார்.


அதன் பின்னர் எஸ்.ஆர்.ராஜா இல்லத்தில், புதிய வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவர் கிருத்திகா தேவி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இதற்கிடையே எஸ்.ஆர்.ராஜாவிடம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசி, 'நான் நிறுத்திய வேட்பாளரை நீங்கள் ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்' என கேட்டுக் கொண்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இந்த விவகாரம் தாம்பரம் திமுகவினரிடம் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வருகிறது. இதனை அதிமுகவினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி காய் நகர்த்தி வருகின்றனர்.

# மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு சோதனை முடிவு சீல்வைக்கப்பட்ட கவரில் மத்தியஸ்தரிடம் ஒப்படைப்பு

**சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் தகவல்**



சென்னை, ஏப்.01: பிரபல சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்தப்பட்டு, முடிவுகள் சீல் வைத்த கவரில் மத்தியஸ்தர் நீதிபதி பி.என்.பிரகாஷிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் ஆணையர் சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளார். திருமணம் செய்து ஏமாற்றி விட்டதாக சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு எதிராக ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா சமூக வலைதளங்களில் பதிவிட்ட பதிவுகளில் மாதம்பட்டி பாகசாலா நிறுவனத்தையும் இணைத்திருந்தார்.

இதை எதிர்த்து மாதம்பட்டி பாகசாலா நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக மாதம்பட்டி ரங்கராஜ்-ஜாய் கிரிசில்டா இடையில் மத்தியஸ்தம் செய்ய உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி பி.என். பிரகாஷை மத்தியஸ்தராக நியமித்துள்ளது. இந்த வழக்கு விசாரணையின் போது, தனது குழந்தையின் தந்தை மாதம்பட்டி ரங்கராஜ் என்று நிரூபிக்க அவருக்கு மரபணு சோதனை நடத்தப்பட வேண்டும் என்று ஜாய் கிரிசில்டா தரப்பிலும், மரபணு சோதனைக்கு தயார் என்று மாதம்பட்டி ரங்கராஜ் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சென்னை ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தடயவியல் துறையையும், ஆய்வகத்தையும் தொடர்பு கொண்டு மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக வழக்கறிஞர் ஆணையரை நியமித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்கு, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு சோதனை நடத்தப்பட்டு அதன் முடிவுகள், மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதிபதி பி.என்.பிரகாஷ் முன்பு சீல் வைத்த கவரில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக வழக்கறிஞர் ஆணையர் தெரிவித்தார். அப்போது, இரு தரப்பினருக்கும் இடையில் மத்தியஸ்த நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாதம்பட்டி ரங்கராஜ், ஜாய் கிரிசில்டா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, விசாரணை ஜூன் 8ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

# சிறுமி, சிறுவர்களை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கோயில் பூசாரிக்கு 178 ஆண்டு சிறை தண்டனை

சிவகங்கை, ஏப்.01: சிவகங்கை அருகே ஒரு சிறுமி, 2 சிறுவர்களை மிரட்டி காயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்த கோயில் பூசாரிக்கு 178 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சிவகங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிவகங்கை அருகே சோழபுரத்தைச் சேர்ந்த கோயில் பூசாரி பெரியசாமி (70). இவர் கடந்த 2024-ம் ஆண்டு கோயிலுக்கு வந்த 2 சிறுவர்கள் மற்றும் ஒரு சிறுமியை மிரட்டி, காயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இதுகுறித்து குழந்தைகள் நலக்குழுவினர் அளித்த புகாரின் பேரில் சிவகங்கை அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிந்து பெரியசாமியை கைது செய்தனர். இந்த வழக்கு சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் நடந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி கோகுல்முருகன் குற்றம் சாட்டப்பட்ட பெரியசாமி 3 குழந்தைகளை மிரட்டியது, காயம் ஏற்படுத்தியது, பாலியல் வன்கொடுமை செய்தது, பூசாரியாக இருந்து கொண்டு பாலியல் குற்றம் புரிந்தது ஆகிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன.

இந்த வழக்கில் 2 பேரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக தலா 30 ஆண்டுகள் சிறை, ரூ.2 ஆயிரம் அபராதம், மேலும் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக 20 ஆண்டு சிறை, ரூ.1000 அபராதம், கோயிலில் பூசாரியாக இருந்துகொண்டு 3 பேரை வன்கொடுமை செய்த குற்றத்துக்காக தலா 30 ஆண்டுகள் வீதம் 90 ஆண்டுகளும், ரூ.3,000 அபராதமும் மேலும் சில பிரிவுகளில் சிறைத் தண்டனை என மொத்தம் 178 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

மேலும் ஒவ்வொரு குற்றத்துக்கும் கொடுக்கப்பட்ட தண்டனையை தனித்தனியாக அனுபவிக்க உத்தரவிட்டார். இதனால் பெரியசாமி 178 ஆண்டுகள் சிறைத் தண்டனையை மொத்தமாக அனுபவிக்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமி, 2 சிறுவர்களுக்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடாக வழங்க அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# மாணவி கொலை வழக்கு 20 நாளில் போலீஸ் குற்றப்பத்திரிகை தாக்கல்

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டம், வேடநத்தம் பகுதியைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவி கடந்த மாதம் 10ம் தேதி இரவு மாயமானார். 11ம் தேதி மாலை அங்குள்ள காட்டுப்பகுதியில் மாணவி கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

போலீசாரின் தொடர் விசாரணையில் ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த முனியசாமி மகன் தர்மமுனீஸ்வரன் (37) என்பவர், மாணவியை கொலை செய்தது சிசிடிவி கேமரா பதிவுகள் மூலம் தெரியவந்தது.

இதையடுத்து குளத்தூர் போலீசார் அவரை கைது செய்தனர்.

மாணவியின் நகங்களுக்குள் இருந்த ரத்த மாதிரியும், தர்மமுனீஸ்வரன் ரத்த மாதிரியும் ஒன்றுதான் என்பது டிஎன்ஏ டெஸ்ட்டில் உறுதியானது. இதை தொடர்ந்து சம்பவம் நடந்த 20 நாட்களில் போலீசார் நேற்று தர்மமுனீஸ்வரன் மீது விளாத்திகுளம் கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு விசாரணை விரைவாக நடத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் என தெரிகிறது.

# சட்டமன்ற தேர்தலையொட்டி முதற்கட்டமாக 3,32,231 அலுவலர்களுக்கு பயிற்சி: தேர்தல் ஆணையம் தகவல்




சென்னை, ஏப்.01: சட்டமன்ற தேர்தலையொட்டி முதற்கட்டமாக 3,32,231 அலுவலர்களுக்கு தேர்தல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, 234 தொகுதிகளிலும், வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி கடந்த 28 மற்றும் 29ம் ஆகிய தேதிகளில் நடந்தது. இந்த பயிற்சி திட்டத்தில், 3,32,231 அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் கடமைகள், பங்களிப்புகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான பாடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேர்தல் தொடர்பான பணிகளை திறம்பட நிர்வகிப்பதற்கான அவர்களின் திறனை வலுப்படுத்தவும், நடைமுறைகளைச் சரியாகச் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், சட்டத்திற்கு உட்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் நடத்துவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதை உறுதி செய்வதே பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

அதேபோல் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குப்பதிவு அலுவலர்கள், வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர், வாக்கு எண்ணும் உதவியாளர் மற்றும் நுண் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய விகிதங்களை இந்திய தேர்தல் ஆணையம் உயர்த்தியுள்ளது.




# தென்சென்னை கிழக்கு மாவட்ட மதிமுக நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா: சீட் கிடைக்காததால் அதிருப்தி



சென்னை, ஏப்.01: தேர்தலில் போட்டியிட சீட் கிடைக்காததால் மதிமுக தென் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் கழக.குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளனர்.

திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ மீது அதிருப்தியை வெளிப்படுத்தி மதிமுக தென்சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் கழக.குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளனர்.

இதுகுறித்து கழக.குமார் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: திராவிட இயக்க கொள்கைகளை ஏற்று திமுகவில் பயணித்து வந்த நான், 1994-ல் வைகோவின் உணர்ச்சிகரமான பேச்சுகளைக் கேட்டு அவருடன்பயணித்தேன்.

வைகோவுடன் பேரணி, நடை பயணம் போராட்டங்கள் என நெருக்கடி காலத்திலும் கடந்த 32 ஆண்டு காலம் அவருடன் பயணித்தேன். கழகமே குடும்பமாக இயங்கிவந்த எனக்கு உரிய அங்கீகாரம் கொடுப்பேன் என அவர் வாக்குறுதி அளித்தார்.

கடும் மனஉளைச்சல்

2021 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கொடுக்கவில்லை. அதற்கு, 'தவறு செய்து விட்டேன். நிச்சயம் வரும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தருவேன்'என அப்போது வாக்குறுதி அளித்தார்.

தற்போது நடைபெற உள்ள தேர்தலில் வாய்ப்பளிப்பதாக 4 மாதங்களுக்கு முன்பே உறுதியளித்தார். ஆனால் இந்த தேர்தலிலும் எனக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டதால், கடுமையான மன உளைச் சலுக்கு ஆளாகி உள்ளேன்.

எனவே, நான் இதுவரை கட்சியில் வகித்துவந்தஆட்சி மன்றக் குழு உறுப்பினர், மாவட்டச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை நான் மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் ராஜினாமா செய்கிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# "திமுக தேர்தல் அறிக்கை ஒரு சூப்பர் ஸ்டார்" - செந்தில் பாலாஜி

கரூர், ஏப்.01: "திமுகவின் தேர்தல் அறிக்கை ஒரு சூப்பர் ஸ்டார். அது, அடித்தட்டு மக்கள் வரை சென்று சேர்ந்துள்ளது. அதனால், நிச்சயமாக மிகப் பெரிய ஆதரவை வாக்குகள் மூலம் கரூர் மாவட்ட மக்கள் திமுகவுக்கும், மதசார்பற்ற கூட்டணிக்கும் வழங்கத் தயாராக இருகின்றனர்." என்று முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் கரூர் தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளர் தியாகராஜன் போட்டியிடவுள்ளார். அவரை ஆதரித்து முன்னாள் அமைச்சரும், முன்னாள் கரூர் சட்டமன்ற உறுப்பினருமான செந்தில் பாலாஜி இன்று கோடங்கிபட்டி பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருக்கு அப்பகுதி பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், "2021 தேர்தலைப் போலவே 2026-ம் சட்டப்பேரவைத் தேர்தலிலும், கரூர் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் உதய சூரியன் சின்னத்தில் வேட்பாளர்கள் களம் காண திமுக தலைவர் ஸ்டாலின் அனுமதி அளித்துள்ளார்.


2021-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கரூர் மாவட்ட மக்கள் நான்கு தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற செய்தனர். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் கரூர் மாவட்டத்திற்கு என்று ரூ.5000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் செய்துள்ளார். குறிப்பாக கரூர் மாநகராட்சிக்கு மட்டும் சுமார் ரூ.1,140 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்து நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைவரால் அறிவிக்கப்பட்ட வேட்பாளர் தியாகராஜனை 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்.

எதிர் முகாமில் உள்ளவர்களுக்கு சாதனையை சொல்லி ஓட்டு கேட்கும் அளவிற்கு அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. அதேபோல் எதிர்முகாமில் உள்ளவர்களின் தேர்தல் அறிக்கையை விட திமுகவின் தேர்தல் அறிக்கை ஒரு சூப்பர் ஸ்டார். திமுகவின் தேர்தல் அறிக்கை அடித்தட்டு மக்கள் வரை சென்று சேர்ந்துள்ளது. நிச்சயமாக மிகப் பெரிய ஆதரவை வாக்குகள் மூலம் கரூர் மாவட்ட மக்கள் திமுகவுக்கும், மதசார்பற்ற கூட்டணிக்கும் வழங்க தயாராக இருகின்றனர்.

கரூரில் முதல்வர் ஸ்டாலின் நாளை பிரச்சாரம்: நாளை கரூர் மாவட்டம் ராயனூரில் மாவட்டத்தில் திமுக போடியிடவுள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார். சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்த தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்க உள்ளனர்.

# அமமுகவுக்கு பிரஷர் குக்கர் சின்னம் ஒதுக்கீடு



சென்னை, ஏப்.01: அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கான வேட்பாளர்களையும் கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அறிவித்துள்ளார். வரும் நாட்களில் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். 120 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையையும் தினகரன் வெளியிட்டார். இந்த தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.

அமமுகவுக்கு பொதுச்சின்னமாக பிரஷர் குக்கர் சின்னம் ஒதுக்குமாறு தினகரன் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்திருந்தார். அந்த மனுவை பரிசீலித்த தேர்தல் ஆணையம், அக்கட்சிக்கு பிரஷர் குக்கர் சின்னத்தை ஒதுக்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே அமமுக குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு இருப்பதால், அந்த சின்னம் மக்கள் அறிந்த சின்னமாக உள்ளது. அதனால் கூட்டணியில் உள்ள அமமுகவுக்கு வெற்றி எளிதாக இருக்கும் என அக்கட்சியினர் கருதுகின்றனர்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM